

கொழும்பு மாநகர சபையின் முதல்வர் பதவிக்கு பொருத்தமானவராக யாரை இடலாம் என்று பேச்சு நடத்தி வருகிறது ஐக்கிய மக்கள் சக்தி.

எம்.பி. பதவியை இராஜிநாமா செய்துவிட்டு மேயர் பதவியில் போட்டியிட வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை முஜிபுர் ரஹ்மான் நிராகரித்துவிட்டதால் மரிக்காரை மேயர் வேட்பாளராக இடுவதற்கு ஆலோசிக்கப்படுகிறதாம்.

இதற்கிடையில் பிரதி மேயர் வேட்பாளர் பதவி தங்களுக்கு வழங்கப்படவேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணி சஜித்திடம் கோரவுள்ளதாக தகவல்.

**உஷ்**


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 185 குரோதி வருடம், மாசி மாதம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(07.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 06, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




**கமெண்ட் கந்தர்...**

வெளிநாட்டுக்கு போன டாக்டர்மார் அங்கே ஸ்ட்ரைக் எல்லாம் பண்ணமாட்டார்களோ?



## ஊடகர்களையும் கவனியுங்கள்!

### வலியுறுத்துகிறார் இராதா எம்.பி.

''ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதியம் உள்ளிட்ட தொழில் ரீதியான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும்''... » 02 பக்கம்



**ஆற்றலைப் பயன்படுத்தி நல்விளைவைப் பெறுங்கள்!** பக்கம் 03



**உலகம் போற்றும் பெண்ணியம்!** பக்கம் 06



**கிரீன்லாந்தை அடைந்தே தீருவோம்!**

ட்ரம்ப் சூளுரை பக்கம் 10



## திஸ்ஸ ரஜமகா விகாரை தொடர்பில் சிறீதரன் எம்.பி. சபையில் கேள்விக்கணை

### உடனடியாக பதிலளிக்க மறுத்தது அரசு

» 02பக்கம்

## நிதி மோசடி விவகாரத்தில் மேர்வின் சில்வா கைது

### 17வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு



காணியொன்று தொடர்பில் போலி ஆவணங்களைத் தயாரித்து நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மேலும் இருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் (05) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேர்வின் சில்வா பெலவத்த, பத்தரமுல்ல... » 02 பக்கம்



## தேசபந்து தலைமறைவு; சி.ஐ.டி. விசாரணை தீவிரம்

» 02பக்கம்

# பெருந்தோட்ட வைத்தியசாலைகள் அரசுடைமை!

### அடுத்த வாரம் சுற்றுநிருபம் வெளிவருமென சுகாதார அமைச்சர் நளிந்த அறிவிப்பு



44 தோட்ட வைத்தியசாலைகளை அரசுடைமையாக்குவது தொடர்பான சுற்று நிருபம் எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிள்ளைகள், சிறுவர்கள் மத்தியில் மாரடைப்பு சடுதியாக அதிகரித்து வருவதுடன், மக்கள் மத்தியில் புற்றுநோயால் பாதிக்கப்படும் வீதம் உயர்வடைந்துள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று(06) இடம்பெற்ற 2025ஆம்.... » 02 பக்கம்

## ஓய்வில் இருந்தாலும் தேவையின்போது வருவேன்!

### கூறுகிறார் ரணில்

''நான் தற்போது ஓய்வில் இருக்கிறேன். ஆனால் தேவையான சகல ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறேன்'' என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பு ப்ளவர் வீதியிலுள்ள அவரின் அலுவலகத்தில்... » 02 பக்கம்

## பெருந்தோட்ட சுகாதார சேவை கம்பனிகளிடம் சென்றால் பெரும் பாதிப்பு

### தேசிய நீரோட்டத்தில் இணைய வாய்ப்பளிக்குமாறு மனோ எம்.பி. கோரிக்கை

» 02பக்கம்





## மருத்துவத்துறையினர் பெருமளவு வெளியேற்றம்

### சபையில் சுட்டிக்காட்டினார் காவிந்த எம்.பி.

2021 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் 195 விசேட வைத்தியர்களும் 2,440 வைத்திய அதிகாரிகளும் 168 விசேட பல் வைத்தியர்களும் 1027 தாதியர்களும் நாட்டைவிட்டு... » 02 பக்கம்

## தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்காக ஒன்பது பேர் களத்தில்

*நூருல் ஹுதா உமர்*

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது மூன்றாண்டு பதவிக்காலம் கடந்த 2024.08.08ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், புதிய உபவேந்தர் ஒருவர் நியமிக்கப்படாது பதில் உபவேந்தராக கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய புதிய ஆட்சியின் கீழ் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி 06ஆம் திகதி விடுத்திருந்தார். அதற்கமைய மார்ச் 06ஆம் திகதி,... » 02 பக்கம்






## திஸ்ஸ ரஜமகா...

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தையிட்டி கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிக்குள் அமைக்கப்பட்டுவருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அதற்கெதிராக அப்பகுதி மக்களால் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் திஸ்ஸ ரஜமகா விகாரை தொடர்பில் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் சிறிதரன் அடுக்கடுக்காக பல கேள்விகளை எழுப்பியபோதும் உடனடியாக இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாதெனத் தெரிவித்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பதில்களை வழங்க கால அவகாசம் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (06) நிலையியற்கட்டளை 27இன் கீழ் 2இல் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவியிடம் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சிவஞானம் சிறிதரன் யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தையிட்டி கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிக்குள் அமைக்கப்பட்டுவருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் திஸ்ஸ ரஜமகா விகாரை தொடர்பில் கேள்விகளை எழுப்பினார்.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தையிட்டி கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிக்குள் திஸ்ஸ ரஜமகா விகாரை என்ற பெயரில் விகாரையொன்று அமைக்கப்பட்டுள்ளதை அமைச்சர் அறிவாரா? அந்த விகாரை அமைக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 20 பரப்பு காணியின் உரிமையாளர்கள் விகாரையை அகற்றி தங்களின் நிலங்களை தங்களிடம் கையளிக்குமாறு மிக நீண்டகாலமாக அஹிம்சை வழியில் போராட்டம் நடத்திவருவதை அமைச்சர் அறிவாரா? இவ்விகாரை அமைந்திருக்கும் காணிகள் திருத்தப்பட்டவாறாக 1950ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க காணி சுவீகரிப்பு சட்டத்தின்கீழ் அரசால் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு சுவீகரிக்கப்பட்டுள்ளதாயின், அது தொடர்பான வர்த்தமானி பிரசுரத்தின் இலக்கத்தையும் என்ன நோக்கத்துக்காக சுவீகரிக்கப்பட்டது என்பதையும் அமைச்சர் அறியத்தருவாரா? ஒரு நோக்கத்துக்காக சுவீகரிக்கப்படும் காணியை இன்னொரு நோக்கத்துக்காக பயன்படுத்த முடியாதென்பதை அமைச்சர் அறிவாரா? அவ்விகாரை அமைந்துள்ள காணியானது விகாரை அமைப்பதற்கென சுவீகரிக்கப்படவில்லையாயின், அக்காணிக்குள் விகாரை கட்டியிருப்பது சட்டத்துக்கு முரணான செயல் என்பதை அமைச்சர் ஏற்றுக்கொள்வாரா? தங்களது காணியைத் தங்களிடம் கையளிக்குமாறு போராடிவரும் காணி உரிமையாளர்களுக்கு அரசின் தீர்வுதான் என்ன என்பதை அமைச்சர் அறியத்தருவாரா? என பல கேள்விகளை சிறிதரன் எம்.பி. அடுக்கினார்.

ஆனால், அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக ஒருவார காலஅவகாசம் வழங்குமாறு கோருகின்றேன்.

காணி அமைச்சு உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களிடம் தகவல்கள் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. அதன்பின்னர் முழுமையான பதிலை வழங்குகின்றேன் - என்றார்.

# சிறுபோகத்தில் வயல் நிலங்களுக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்க ஜனாதிபதி வலியுறுத்து



சிறுபோகத்தின்போது பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்காக வயல் நிலங்களுக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி தொடர்ச்சியாக வழங்குவதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

சிறு போகத்துக்கு அவசியமான உர விநியோகம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (06) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம் தொடர்பில் இங்கு முக்கியமாக ஆராயப்பட்டதோடு, தடையின்றி விவசாயிகளுக்கு சிறுபோக பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ லால்காந்த, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்க, ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க, விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டீ.பீ.விக்ரமசிங்க, ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் கபில ஜனக பண்டார, விவசாய தொழில்நுட்பப் பிரிவு பணிப்பாளர் நாயகம் ஆர்.டீ.சித்ராநயனா, கமநல சேவை ஆணையாளர் நாயகம் யூ.பீ.ரோஹன ராஜபக்ஷ, தேசிய பசளை செயலக அலுவலகப் பணிப்பாளர் சந்தன லொகுஹேவகே, விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நிதி அமைச்சு என்பவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள், தனியார் துறை பசளை விநியோக நிறுவனப் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## பெருந்தோட்ட சுகாதார...

''பெருந்தோட்டத்துறைக்கான சுகாதார சேவை செயற்பாடுகளை நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டாமென்பதுடன், பெருந்தோட்ட மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணையவேண்டுமென்றால் அவர்கள் கம்பனிகளின் நிர்வாகத்திலிருந்து முழுமையாக விடுபட வேண்டும்'' - என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் அபேசிங்கவால் முன்வைக்கப்பட்ட உரையின் இடைநடுவே எழுந்து கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''பெருந்தோட்ட தமிழ் மக்கள் பற்றி பேசுவதும் அவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வரவு-செலவுத் திட்டம் மீதான உரையின் இறுதியில் பெருந்தோட்ட நிர்வாகத்தை இணைத்துக்கொண்டு பெருந்தோட்ட வைத்தியசாலைகளுக்கான வசதிகளை மேம்படுத்தப்போவதாகக் கூறியிருந்தார். ஆனால், தயவுசெய்து அதனை மாத்திரம் செய்யவேண்டாமென வேண்டுகோள் விடுக்கிறேன்.

பெருந்தோட்ட மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணையவேண்டுமென்றால் அவர்கள் முழுமையாக அதிலிருந்து விடுபடவேண்டும். பெருந்தோட்ட மக்களின் தொழில்சார் விடயங்களை மாத்திரமே பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கவேண்டும். அது தவிர்ந்த ஏனைய சகல விடயங்களையும் தேசிய நிர்வாகத்தின்கீழ் இணைக்க வேண்டும். சுகாதாரம் சார்ந்த விடயங்களை தேசிய சுகாதார வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

சுகாதாரத் துறைசார்ந்த விடயங்களை பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கினால் அந்த சேவை முழு மக்களுக்கும் கிடைக்காது. பெருந்தோட்ட மக்கள் சகலரும் பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதில்லை. 20 சதவீதமானவர்கள் மாத்திரமே தோட்டங்களில் பணிபுரிகிறார்கள். எனவே, சுகாதாரத் துறைசார் விடயங்களைப் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கினால் தோட்டத்தில் தொழில் புரிபவர்களுக்கு மாத்திரமே மருத்துவம் செய்ய முடியும் என்று கூறுவார்கள். எனவே, பெருந்தோட்டங்கள் சார்ந்த சுகாதார விடயங்களை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்க வேண்டும்'' - என்றார்.

## தேசபந்து தலைமறைவு...

கைதுசெய்வதற்காக பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகியுள்ள நிலையில், அவருக்கு யாராவது அடைக்கலம் கொடுத்திருந்தால் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படுமென்று பொலிஸார் அறிவித்துள்ளனர். அதற்கமைய, தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் ஏதாவது தகவல்கள் தெரிந்திருந்தால் அதுதொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.மனதுங்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை, வெலிகம பிரதேசத்தில் W 15 ஹோட்டலுக்கு வெள்ளை நிற வேனில் வந்த சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற வெலிகம பொலிஸ் ரோந்து வாகனத்திலிருந்து பொலிஸ் அதிகாரிகள் சிலர் வேனின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். வேனிலிருந்து பிரச்சினைக்குரிய குறித்த ஹோட்டல் மீது கொழும்பு குற்றப்புலனாய்வு அதிகாரிகளினாலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்ததுடன், பொலிஸார் நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் குறித்த வேனில் இருந்த கொழும்பு குற்றப்புலனாய்வு அதிகாரிகள் இருவர் காயமடைந்த நிலையில் பின்னர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகளுக்கமைய, இந்த சர்ச்சைக்குரிய சம்பவ இடத்துக்கு கொழும்பு குற்றத்தடுப்பு அதிகாரிகள் சட்டத்துக்குப் புறம்பாகவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கடந்த 27ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, பொலிஸ் அதிகாரி உயிரிழக்கச் செய்தமை குற்றச்செயல் என்பதால் அதனுடன் தொடர்புபட்ட அப்போதைய பதில் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட எட்டு பேரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்வதற்கான பணிகள் பொலிஸாரால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (06) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதுதொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''மாத்தறை நீதவான் நீதிமன்றத்தால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்புக்கமைய சந்தேகநபர்கள் எட்டு பேரை கைதுசெய்யவேண்டியிருந்தது. 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தின்போது குறித்த வேனில் பயணித்த ஏழு பேர் அந்தச் சம்பவம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத் தாக்கல் செய்திருந்தார்கள். அதற்கமைய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து அதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம். முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்வதற்காக அவர் தங்கியிருந்த இடத்தைப் பரிசோதனை செய்திருந்தோம். ஆனால், அவர் அந்த இடத்திலிருந்து தலைமறைவாகியுள்ளார். பொலிஸ் என்ற அடிப்படையில் சந்தேகநபரொருவர் சட்டத்தை மதிக்காமல் நீதிமன்றத் தீர்ப்பை பொருட்படுத்தாமல் தப்பிச்சென்றால் அவரை கைதுசெய்வதற்கு தனிப்பட்ட நடைமுறைகள் இருக்கின்றன. அதற்கமைய, தேசபந்து தென்னக்கோன் தொடர்பான தொலைபேசி அறிக்கை, அவர் தங்கியிருந்த இடங்கள் உள்ளிட்ட சகலதும் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

சாதாரண சந்தேகநபரொருவர் தொடர்பில் செயற்படுவதைபோன்றே செயற்பட்டு அவரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கமாட்டோம். முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்ற விசேட சலுகைகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. அவர் தொடர்பில் நீதிமன்ற உத்தரவும் வெளியாகியுள்ளது. எவராவது அவருக்கு அடைக்கலம் கொடுத்து ஒத்துழைப்பு வழங்குவார்களென்றால் தண்டனை கோவைச் சட்டத்தின் 209 உறுப்புரையின்கீழ் அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும். அதேபோல் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் தகவல்கள் எதுவும் இருந்திருந்தால் அதுதொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்க முடியும்.

ஏற்கனவே தேசபந்து தென்னக்கோனுக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பான அறிவித்தல்களும் விமான நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவர் தப்பிச்செல்ல வாய்ப்பில்லை. எங்களின் விசாரணைகளுக்கமைய அவர் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்பதற்கான தகவல் கிடைக்கவில்லை. இந்தச் சம்பவம் ஒட்டுமொத்த திணைக்களத்தினதும் நம்பகத்தன்மையுடன் தொடர்புடைய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதென்பதால், ஏனைய நாட்களை விட அதிக கவனஞ்செலுத்தி அவரை கைதுசெய்வதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

## தென்கிழக்குப் பல்கலை...

3.00 மணிவரை ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதனடிப்படையில், கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம்.றஸ்மி, பேராசிரியர் எம்.ஐ.எஸ்.சபீனா, பேராசிரியர் எஸ்.எம்.ஜுனைடீன், பேராசிரியர் எப்.ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம்.முஸாதிக், பேராசிரியர் ஏ.ஜௌபர் மற்றும் கலாநிதி யூ.எல்.செயினுடீன் உள்ளிட்ட ஒன்பதுபேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய உபவேந்தர், பல்கலைக்கழகப் பேரவையின் விசேட ஒன்றுகூடலொன்றினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் (Criteria) கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவுசெய்வர். குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வில் ...

நேற்று முன்தினம் (05) இடம்பெற்றது.

அடிப்படைச் சம்பளத் திருத்தத்துடன் 1/80 என்ற அடிப்படையில் மேலதிக நேரக் கொடுப்பனவை அவ்வாறே வழங்குதல், விடுமுறை நாள், ஞாயிற்றுக்கிழமைகளில் பணிபுரிதல் என்பவற்றுக்காக வழங்கப்படும் 20/1 வீதக் கொடுப்பனவை அவ்வாறே முன்னெடுத்தல், 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பை அவ்வாறே முன்னெடுத்தல் உள்ளிட்ட மீளாய்வு தொடர்பான யோசனைகள் மற்றும் வேலைத்திட்ட செயன்முறைகள் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்னாள் ஜனாதிபதி ரணிலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ''உங்களைப் போன்ற அனுபவம்கொண்ட தலைவர் தற்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்வது பொருத்தமானதாக இருக்கும்'' என்று கூறியுள்ளனர்.

அதற்கு ரணில் விக்கிரமசிங்க, ''இல்லை. நான் தற்போது ஓய்வில் இருக்கிறேன். இருந்தபோதும் உங்களுக்குத் தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் பெற்றுக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன்'' என்று பதில் வழங்கியுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, ''நாம் நாட்டுக்காக அவரிடமிருந்து வேலையைப் பெற்றுக்கொள்வோம்'' என்று வைத்திய அதிகாரிகளுக்குக் கூறியிருக்கிறார்.

## ஊடகர்களையும்...

என வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் வரவு - செலவுத் திட்டத்தின் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

அவர் சபையில் மேலும் தெரிவிக்கையில்,

''அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் என்றதோர் அமைப்பு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கவனஞ்செலுத்தியுள்ள அந்த ஒன்றியத்தினர், அது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளார்கள். அதற்கிணங்க, அதற்கான நேரமொன்றை ஒதுக்கித் தருவதாக ஊடகத்துறை அமைச்சரும் என்னிடம் தெரிவித்தார். ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதியம், ஊடகவியலாளர்களுக்கான அடிப்படை வசதிகள், அவர்கள் தமது தொழிலை முறையாக முன்னெடுப்பதற்கான உபகரணங்களை பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களில் அரசாங்கம் கவனஞ்செலுத்த வேண்டும். பெரும்பாலான ஊடகவியலாளர்கள் வீட்டு வசதியின்றியுள்ளதுடன், அதிகமானோர் வாடகை வீடுகளிலேயே வசிக்கின்றனர். அது தொடர்பிலும் அரசாங்கம் கவனஞ்செலுத்த வேண்டும்.

அந்த ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அண்மையில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள். அதன்போது ஊடகவியலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இந்தியத் தூதுவர் அவர்களிடம் தெரிவித்துள்ளார். அதேபோன்று அரசாங்கமும் இவ்வாறான திட்டங்களை ஊடகவியலாளர்களுக்காக முன்னெடுக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிதி மோசடி...

பிரதேசத்திலுள்ள அவரின் வீட்டில் வைத்தே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிபத்கொட பிரதேசத்தில் காணியொன்று தொடர்பில் போலி ஆவணங்களைத் தயாரித்து நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் மேர்வின் சில்வா உள்ளிட்ட இருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.மனதுங்க தெரிவித்தார்.

பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று (06) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கமையவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளுக்கமைய ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், மேர்வின் சில்வா உள்ளிட்ட இருவர் நேற்று (06) மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், மூவரையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


**வாகன சந்தை – அநுராதபுரம்**

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BAN-61xx | BAJAJ | PULSAR 135 LS |
| NC BGL-34xx | BAJAJ | PLATINA |
| NC BBF-43xx | BAJAJ | PULSAR 150 |
| NC BFD-29xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| NC BCC-44xx | BAJAJ | PLATINA 100 |
| NC BCL-50xx | BAJAJ | PULSAR 150 |
| NC BFR-04xx | BAJAJ | PULSAR 150 |
| NC BJG-96xx | BAJAJ | CT 100 |
| NC BIL-92xx | BAJAJ | CT 100 |
| WP AAL-01xx | BAJAJ | RE 205 |
| NC BDN-16xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| NC BFD-39xx | BAJAJ | CT 100 |
| NC BDY-17xx | BAJAJ | CT 100 |
| NC BBF-21xx | BAJAJ | PULSAR 150 |
| NC BCV-53xx | BAJAJ | BAJAJ PULSAR -150cc |
| NW BBN-84xx | BAJAJ | PULSAR 150 |
| NC BIB 11xx | HONDA | DIO SCV 110 |
| NC BGT-70xx | HONDA | DIO SCV 110 |
| NC BDT 61xx | HONDA | DIO SCV 110 |
| NW BGO-35xx | HONDA | DIO SCV 110 |
| NC BFC-40xx | HONDA | DIO SCV 110 |
| NW BHO-31xx | HONDA | DIO SCV 110 |
| NC BGQ-24xx | HONDA | DIO SCV 110 |
| NC BIC-12xx | HONDA | DIO SCV 110 |
| NC BHF-63xx | HONDA | DIO SCV 110 |
| NC BIC-84xx | HONDA | DIO SCV 110 |
| NC BHG-21xx | HONDA | DIO SCV 110 |
| NW BIR-35xx | HONDA | DIO SCV 110 |
| NC BGL-51xx | HONDA | DIO SCV 110 |
| NC BCI-47xx | YAMAHA | FZ S |
| NC BHU-75xx | YAMAHA | RAY ZR |
| NC BHU-95xx | YAMAHA | RAY-ZR |
| NC BCR-91xx | YAMAHA | FZ16 |
| NC BEJ-38xx | TVS | METRO |
| NC BFY-05xx | TVS | WEGO |
| NC BGK-32xx | TVS | WEGO |
| NC BIN-50xx | HERO | MAESTRO EDGE |
| NC BHT-12xx | HERO | PLEASURE |

இடம்:–இல: 47/49, ஜயவேவ வீதி, யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்.
பார்வையிடும் திகதி:–10.03.2025(காலை 8.30 முதல்10.30 வரை)
மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:–10.03.2025 காலை 10.30 மணிமுதல்
விஸ்வா:–0774787096 தரிந்து:–0773147609
துரிதஅழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:– 0710356125
வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.
நிபந்தனைக்கு உட்பட்டது
AMF அசோசியேட், மோட்டார்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663


## மருத்துவத் துறையினர்...

வெளியேறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (06) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் சுகாதாரத் துறை மற்றும் ஊடகத் துறை அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார சேவைக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறோம். ஒடிசம் குறைபாட்டால் பாதிக்கப்படும் பிள்ளைகளின் நலன்கருதி விசேட அவதானம் செலுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. வரவு - செலவுத் திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசணை வழங்கல் திட்டத்துக்கும் சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவைக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. சிறந்த திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரச சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. சுகாதார சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளதாகவும் நீக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. சுகாதார சேவையாளர்களுக்காக மேலதிகக் கொடுப்பனவு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் காலத்தில் பாரிய போராட்டத்துக்கும் மத்தியில் சட்டத்தினூடாக வழங்கப்பட்டது.

சுகாதார சேவையாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஏனெனில், சுகாதார சேவை நெருக்கடிக்குள்ளானால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுவார்கள். சுகாதாரத் துறை முன்னாள் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல சுகாதாரத் துறையையும் சுகாதார சேவையாளர்களையும் நெருக்கடிக்குள்ளாக்கினார்.

2021 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் 195 விசேட வைத்தியர்களும் 2,440 வைத்திய அதிகாரிகளும் 168 விசேட பல் வைத்தியர்களும் 1,027 தாதியர்களும் 283 வைத்திய சேவையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களும் 79 தர அடிப்படையிலான வைத்தியர்களும் 108 சுகாதார சேவை கீழ்நிலை உத்தியோகத்தர்களும் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

அரச வைத்தியசாலைகளில் நிலவும் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சுகாதாரத் துறையில் காணப்படும் ஆளணி பற்றாக்குறைக்கும் உடன் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்'' - என்றார்.

## பெருந்தோட்ட...

ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் சுகாதாரத்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''முதல்நிலை வைத்திய சேவை, வைத்தியசாலை கட்டமைப்பு அபிவிருத்தி, மருந்து விநியோகம், போசணை மட்டம் மற்றும் உலகளாவிய மட்டத்தில் சுகாதார சேவையை திறம்படுத்தல் ஆகிய ஐந்து துறைகளின் ஊடாக சுகாதார சேவையை அபிவிருத்திசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியிலும் இம்முறை அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தோட்ட வைத்தியசாலைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தோட்ட வைத்தியசாலைகளை அரசுடைமையாக்குவது தொடர்பில் பெருந்தோட்ட அமைச்சு, காணி அமைச்சு மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆகிய தரப்புகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள 44 தோட்ட வைத்தியசாலைகளை அரசுடைமையாக்குவது தொடர்பான சுற்றுநிருபம் எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

வைத்தியசாலைகள் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேசிய வைத்தியசாலை, பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலை, ஆதார மற்றும் மாவட்ட வைத்தியசாலை என்ற அடிப்படையில் பல வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. இந்த வைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, திருகோணமலை, கேகாலை, அம்பாறை மற்றும் சிலாபம் ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவை அபிவிருத்திசெய்வதற்கு 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் நிறைவுபெறும்.

இருதய நோய் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கு ரூபா 1,600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் இருதய நோய் சடுதியாக அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் புற்றுநோயால் பாதிக்கப்படும் விகிதம் உயர்வடைந்துள்ளது. வருடாந்தம் 36ஆயிரம் பேர் புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்ற நிலையில், அவர்களில் 24ஆயிரம் பேர் முறையாக சிகிச்சை பெறுகின்றனர். 22 அரச வைத்தியசாலைகளில் புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. அநுராதபுரம், குருநாகல், பதுளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக லினொக் மருத்துவ சாதனத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத வைத்திய முறைமையை மேம்படுத்த வரவு - செலவுத் திட்டத்தில் 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆங்கில மருத்துவ முறைமைக்கு இணையாக பாரம்பரிய ஆயுர்வேத வைத்திய முறைமையும் அபிவிருத்தி செய்யப்படும். எக்காரணிகளுக்காகவும் நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படாது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான மருந்து விநியோகத்துக்கு இம்முறை 183 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, மருந்து விநியோகம் சீராக முன்னெடுக்கப்படும். சுகாதார சேவையில் நிலவும் சம்பள முரண்பாட்டுக்கு இம்முறை தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவையாளர்கள் இன்று (நேற்று) பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவிருந்தார்கள். தொழிற்சங்கத்தினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தொழிற்சங்கப் போராட்டத்தை தடுத்துள்ளோம். எக்காரணிகளுக்காகவும் சுகாதார சேவை பலவீனமடையாது என்பதை மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்'' - என்றார்.




# மக்கள் வங்கி வனிதா வாசனாவின் கவர்ச்சிகரமான சலுகைகளுடன் மகளிரை மேம்படுத்துகிறது



டி.எம்.டபிள்யூ.சந்திரகுமார
மக்கள் வங்கியின் பிரதி
பொது முகாமையாளர் – சில்லறை வங்கியியல்

மக்கள் வங்கியினால் இலங்கை மகளிரின் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பதன் மூலம் அவர்களின் பொருளாதாரத் திறனை மேம்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட வனிதா வாசனா கணக்கானது வனிதா வாசனா வாடிக்கையாளர்களுக்கு பல சிறப்புச் சலுகைகளை முன்னிலைப்படுத்தி மீண்டும் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடவுள்ளது.




இன்றைய பெண்ணானவள் அன்பான தாயாக, மகளாக, சகோதரியாக எண்ணற்ற உறவுகளை வகிப்பதன் மூலம் தன் குடும்பத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துகிறாள். அது மட்டுமல்லாது, கடின உழைப்பை வழங்குபவளாக, அறிவாற்றலின் கலங்கரை விளக்கமாக, துணிச்சலான தீர்மானங்களை மேற்கொள்பவளாகவும் மற்றும் உத்வேகம் தரும் தலைவியாகவும் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் பெரும் பங்கினை வகிக்கிறாள்.

தமது குடும்பம், சமூகம் மற்றும் தாய்நாட்டின் எதிர்காலத்துக்காக கண்ணீரையும் வியர்வையும் சிந்தி, குறிப்பிடத்தக்க இலக்கை நோக்கி இலங்கை மகளிர் தலைமுறை தலைமுறையாக ஆற்றிவரும் விலைமதிப்பற்ற பணிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மார்ச் 08ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுவதில் மக்கள் வங்கியும் இணைந்து கொள்கிறது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் - சில்லறை வங்கியியல் டி.எம்.டபிள்யூ.சந்திரகுமார இது தொடர்பாக தனது கருத்தைப் பகிர்ந்து கொள்கையில், “பல வருடங்களாக, மக்கள் வங்கியானது, புதிதாகப் பிறந்த குழந்தைகள் முதல் சிரேஷ்ட பிரஜைகள் வரை - வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் பரந்த தேவைகளுக்கேற்ப பல்வேறு கணக்குத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க, 1993ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக இலங்கையில் மகளிரின் முன்னேற்றத்துக்காக வனிதா வாசனா சேமிப்புக் கணக்கு திட்டமானது உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. வனிதா வாசனா சேமிப்புக் கணக்கானது இலங்கையில் வர்த்தக வங்கி ஒன்றினால் பெண்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது கணக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

“அன்று தொடக்கம் மக்கள் வங்கியானது, சேமிப்பை ஊக்குவிப்பதன் மூலமும் பல்வேறு கடன் வசதிகளை வழங்குவதன் மூலமும் நாட்டிலுள்ள மகளிரை வெற்றிகரமாக மேம்படுத்தி வருவதுடன் அதன்மூலம் குடும்பங்களின் பொருளாதாரத்தை விருத்தியடையச் செய்வதுடன், வனிதா வாசனா சேமிப்புக் கணக்கின் ஊடாக உருவாக்கப்படும் சேமிப்பின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது.

இந்நிலையில் மக்கள் வங்கியானது இந்த ஆண்டு, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தேசத்தை வழிநடத்தும் துணிச்சலான பெண்களின் நிதியியல் அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன், பல சிறப்புச் சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது. வங்கியானது தனது இந்த முயற்சிக்கிணங்க பலவிதமான சவாலான பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நவீன பெண்களின் பங்குக்கு அங்கீகாரமளிக்கும் அதேவேளை, பெண்களை தொழில்முனைவோராக மேம்படுத்துவதற்கு இது வழிவகுக்கும்.

இதற்கிணங்க, மக்கள் வங்கியானது “உயர் வட்டியுடனான வனிதா வாசனா” சேமிப்புக் கணக்கின் மூலம் பல்வேறு நன்மைகளை அறிவித்துள்ளது. இந்தக் கணக்கில் பணத்தை வைப்பு செய்பவர்களுக்கு பல விசேட வெகுமதிகளை வழங்க வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேலதிகமாக, அதிக வட்டி விகிதத்தை வழங்குவதன்மூலம், இந்த கணக்கானது பெண்களுக்கு நெகிழ்வான மற்றும் பாதுகாப்பான அதிக வருமானத்துடனான முதலீட்டை வழங்குகிறது.

மேலும், வனிதா வாசனா கணக்குக்கு இணையாக, மகளிர் தலைமுறையினரின் பொருளாதார சக்தியை சேமிப்பின் மூலம் முறையாக உயர்த்தும் இலக்கினை நோக்காகக் கொண்டு வனிதா வாசனா பணத் திட்டமிடலுக்கான முதலீட்டுத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ரூ.25,000, ரூ.50,000, ரூ.100,000, ரூ.250,000 மற்றும் ரூ.500,000 பெறுமதியான இந்த முதலீட்டுத் திட்டங்கள், ஆண்டின் இறுதிக்குள் நீங்கள் சேமிக்க விரும்பும் தொகையைப் பொறுத்து கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குகின்றன. வேலை அழுத்தத்தினால் பரபரப்பான கால அட்டவணையின் காரணமாக நேரமில்லாமல் தவிப்பவர்கள், நிலையான உத்தரவுகள் மூலம் தவணை செலுத்தும் வசதியையும் இத்திட்டம் மூலம் பெற முடியும். மேலதிகமாக, ஒவ்வொரு முதலீட்டுத் திட்டமும் ஒரு சிறப்புப் பரிசை வழங்குகிறது.

மேலதிகமாக, வனிதா வாசனா கணக்குக்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட வர்த்தகநாம டெபிட் அட்டையானது, நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள முன்னணி சில்லறை விற்பனையாளர்களிடம் பிரத்தியேகமான விலைக்கழிவுகளை உங்களுக்கு வழங்குகிறது. வனிதா வாசனா கணக்கு வைத்திருப்பவர்கள் மக்கள் வங்கியின் ஸ்வர்ண பிரதீபா அடமானக் கடன்களுக்கான 0.5வீத வட்டிச் சலுகையின் பலனையும் அனுபவிக்கின்றனர்.

இந்த நன்மைகளுக்கு மேலதிகமாக, ஏற்கனவே வனிதா வாசனா கணக்குகளை வைத்திருக்கும் மற்றும் சர்வதேச மகளிர் தினத்தன்று புதிய கணக்குகளை ஆரம்பிக்கும் மகளிருக்காக மக்கள் வங்கி வனிதா வாசனா கடனட்டை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

நீங்கள் முறையாகச் சேமித்து, சரியான திட்டத்தைப் பின்பற்றினால், இந்த சேமிப்பு வழிமுறைகள் எதிர்காலத்தில் நிதிப் பாதுகாப்பை அடைய உதவும். ஒரு பெண்ணிடம் உயர்கல்வி, வெளிநாட்டுப் பயணம், புலம்பெயர்தல், சுயதொழில், முதலீடு அல்லது தொழில் தொடங்க அல்லது குடும்பத்தில் அவசரநிலைக்கு தேவையான பணம் இருப்பின், அது அவளுடைய தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்படி முறையாகச் சேமிக்கும் பணம், வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையை நிச்சயமாக உங்களுக்குள் வளர்க்கும்.

உங்கள் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக மக்கள் வங்கி வனிதா வாசனா கணக்கு மூலம் இந்த பிரத்தியேக நன்மைகளை வழங்குகிறது. ஒளிமயமான எதிர்காலம் குறித்து நம்பிக்கை கொண்ட பெண்ணாக, வனிதா வாசனா கணக்கில் இணைந்து, உங்கள் வாழ்நாள் கனவுகளை நிறைவேற்றி, இந்த வையகத்தை வெல்வதற்கு மக்கள் வங்கி உங்களை அழைக்கிறது. இந்த நன்மைகள் பற்றிய மேலும் தகவல்களைப் பெற, 1961 எனும் மக்கள் வங்கியின் அவசர தொலைபேசி எண்ணுக்கு அழைப்பு விடுக்கவும் அல்லது www.peoplesbank.lk ஐப் பார்வையிடவும்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 07ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ஐ.எம்.எவ். கூறுவதில் உள்ள நியாயம்!

இலங்கைத் தீவு இதுவரை காலமும் சந்தித்த மிக மோசமான நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான கடைசி பெரிய உந்துதல் இந்த வரவு - செலவுத் திட்டம் தான் என்று சர்வதேச நாணய நிதியத்தின் குழுத் தலைவர் பீட்டர் ப்ரூவர் கூறியிருக்கிறார்.

இந்த மீட்சிக்காக இலங்கை தன்னைக் கட்டமைப்பு ரீதியாகத் தியாகம் செய்யவேண்டி இருக்குமென்று அவர் சுட்டிக்காட்டுகிறார். பொருளாதாரச் சீர்திருத்தங்களுடன் இலங்கையின் வர்க்கத் தரப்புகள் இணைந்துகொண்டு, குறிப்பிடத்தக்களவு தியாகங்களைச் செய்வது நாட்டின் பொருளாதாரத்தின் மீட்சிக்கும் நிலைத்த தன்மையை உறுதிசெய்வதற்கும் முக்கியமானதென்று அவர் கூறுகிறார்.

இலங்கை நெருக்கடிகளிலிருந்து மீண்டு வருவதற்கு வருவாயில் இன்னும் சிறிது அதிகரிப்பைக் காட்டவேண்டிய கடைசி வரவு - செலவுத் திட்டம் இது என்று அவர் குறிப்பிடுகின்றார்.

நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் வரிகளை உயர்த்தி, நாட்டின் வருவாயை மேம்படுத்தி, பொதுச் செலவுகளைக் குறைத்துள்ளன.

ஆனால், அதற்கெதிராக மருத்துவர்கள், ஆசிரியர்கள், கல்வி ஊழியர்கள் போன்ற பொதுத் தரப்பினர் போராட்டக் கொடி உயர்த்தியபடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் களத்தில் இறங்கத் தயாராகி வருகின்றனர்.

நாட்டின் பண வீக்கம் குறைவாக உள்ளது. வருவாய் வசூல் மேம்பட்டு வருகிறது. கையிருப்புத் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இவை பொருளாதார மீட்சிக்கான நல்ல சமிக்ஞைகள். இந்த நிலைமையை போட்டடிக்காமல் இன்னும் கொஞ்சம் தியாகம் செய்ய இணங்குவதன் மூலம் நாட்டை மீட்கமுடியுமென்று சர்வதேச நாணய நிதிய குழுத்தலைவர் கூறுவதில் அர்த்தமுண்டு.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து மீண்டெழ முடியாமல் தவித்த இலங்கை, இப்போது சற்று ஆசுவாசப்பட்டு மூச்சு விடுகின்றது. மிக இக்கட்டான காலத்தில் இலங்கையை நெருக்கடியிலிருந்து பிணை எடுக்க முன்வந்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆபத்துக்கால உதவித் திட்டத்தால் இது சாத்தியமாயிற்று.

இப்போது சர்வதேச நாணய நிதியம் மீண்டும் இலங்கை நெருக்கடியில் சிக்கலாமென்று எச்சரிக்கையை முன்வைத்திருக்கிறது. இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சலுகைகள் குறைக்கப்பட்டதற்கெதிராக தொழிற்சங்கங்கள் நடத்தும் அச்சுறுத்தல்களால் இலங்கையின் பலவீனமான பொருளாதார மீட்சி தடைப்படக்கூடுமென்று சர்வதேச நாணய நிதியம் இப்போது எச்சரித்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முதல் வரவு - செலவுத் திட்டம் பொதுத்துறையில் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதாகக் கண்துடைப்புக்குக் குறிப்பிட்டாலும், நாட்டின் நலிவுற்ற நிதி நிலைமையை மீட்டெடுப்பதற்கான - சரிசெய்வதற்கான - தொடர்ச்சியான முயற்சியாக அரச ஊழியர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்பட்டு வந்த சலுகைகளில் ஆழமான வெட்டுகளையும் செய்துள்ளது.

இலங்கையின் முக்கியமான அரச மருத்துவர்கள் சங்கம் தமது கொடுப்பனவுகளில் வெட்டுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலைநிறுத்தத்தை நடத்தப் பரிசீலித்து வருகிறது. அதே நேரத்தில், ஆசிரியர்களும் வேலைநிறுத்தங்களைப் பரிசீலித்து வருகின்றனர். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் வேலை நிறுத்த முஸ்தீபுகளை அடையாள வேலைநிறுத்தம் மூலம் கோடி காட்டியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கருத்து குறித்தான விமர்சனங்கள் பரவலாக எழ ஆரம்பித்துள்ளன. இலங்கையின் உள்ளக விடயத்தில் தலையிட்டுத் தீர்மானிக்க அவர்கள் யார்? மின்கட்டணம், நீர்க்கட்டணம், எரிபொருள் விலையுயர்வு என்பனவற்றையெல்லாம் கூற அவர்கள் யார் என்று அரசியல்வாதிகள்கூட கேட்க ஆரம்பித்துள்ளனர். ஆனால், கடந்த காலங்களில் அத்தியாவசிய தேவைகளைக் கூட பூர்த்திசெய்துகொள்ள முடியாமல் மக்கள் பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது, நாட்டின் நிலைமை சீரடைய கைகொடுத்தது சர்வதேச நாணய நிதியம்தான் என்பதை எவரும் இலகுவில் மறந்துவிடக் கூடாது. இப்போதும் சர்வதேச நாணய நிதியம் கூறுவதில் நியாயங்கள் உள்ளன.

## இன்றைய நாளில்...

- 1876 – அலெக்சாண்டர் கிரஹம்பெல் தொலைபேசிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1971 – கிழக்குப் பாகிஸ்தான் அரசியல் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் டாக்காவில் நிகழ்த்திய தனது வரலாற்றுப் புகழ் மிக்க உரையில், “இம்முறை போராட்டம் நமது விடுதலைக்கானது” - என அறிவித்தார்.
- 1996 – பலஸ்தீனத்தில் முதலாவது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டது.

# உங்களின் ஆற்றலை பயன்படுத்தி நல்விளைவைப் பெறுங்கள்!

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தனித்ததோர் ஆற்றலும் திறமையும் உள்ளன. அவற்றை வாழ்க்கையின் சரியான முன்னேற்றப்பாதையில் பயன்படுத்தத் தவறக்கூடாது. எனவே,அவ்வாறு பயணிப்பார்களாயின் அது நல்ல விளைவைத் தருகின்ற நிலைக்கு ஒவ்வொருவரையும் கொண்டுபோய்ச் சேர்க்குமென்பது நிதர்சனம்.

‘‘என்னால் முடியாதெனில் வேறு யாரால் முடியும்? இப்போது முடியாதெனில் வேறு எப்போது முடியும்?’’ - என வாழ்க்கையில் சிந்தியுங்கள் - செயற்படுங்கள்.

உங்களிடமுள்ள ஆற்றலை நீங்கள் ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள்.

என்னால் இது முடியுமா?
இல்லை முடியாது
- என்று



எடுத்த எடுப்பிலேயே எதைக் கண்டும் அச்சப்படாதீர்கள். தோல்விக்கு அஞ்சி முடங்கிக் கிடப்பதோ - மடங்கிக் கிடப்பதோ நல்ல வாழ்க்கை ஆகாது. உங்களை நீங்களே தாழ்த்தி - தாழ்வு மனப்பான்மை கொள்ளாதீர்கள். போட்டியில் தோற்றாலும் ஓட்டப் பந்தயத்தில் ஓடுபவன்தான் வெளியில் நின்று விமர்சிப்பவனை விட மேலானவன்.

பல்வேறு உலகப் புகழ்பெற்ற அறிஞர் பெருமக்களெல்லாம் ஒவ்வொரு தோல்வியும் வெற்றியை நோக்கித் தம்மை அழைத்துச் செல்லும் படிக்கட்டுகள் எனக் கருதினர் - உழைத்தனர் - இறுதியில் ஜெயித்தனர். தோமஸ் ஆல்வா எடிசன் சந்தித்த தோல்விகள் ஏராளம் – ஏராளம். ஆனால், அவரின் மேன்மையால் அவர் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞான மேதையானார்.

வீட்டிலுள்ள நம் (இரு பால்) குழந்தைகள், இளைஞர்கள் நன்றாகப் படிக்கவேண்டுமென்று தான் நாம் அனைவரும் உளமார விரும்புகிறோம். ஏன், அதிலும் அதிகமாகவே ஆசைப்படுகிறோம். பிள்ளைகள் ஒவ்வொருவருக்குள்ளும் புதைந்து கிடக்கும் பேராற்றலையும் அவர்களுக்குள்ள திறமைகளையும் வெளியே கொண்டுவருவது தான் ஆசிரியர்கள் பெற்றோர்களின் முக்கிய பணியும் பங்குமாகும்.

பிள்ளைகள் தவறு செய்யும் போது கூட உடனே கடும் மொழியில் பெற்றோர்கள் வசைமாரி பொழிவதை விட, இவ்வாறு தவறுகள் செய்வதால் ஏற்படக்கூடிய பாதகங்களைச் சுட்டிக்காட்டி - தவறுகளைச் சுட்டிக்காட்டி - நல்ல அறிவுரைகள் சொல்லி, அவர்களின் நல்ல செயல்களை நன்றாகப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். “மொட்டு பூவாக மலர்வதைப் போல இயல்பாகவே அந்தப் பாராட்டு இருத்தல் வேண்டும்”

“அடடா! இன்று உன் கையெழுத்து, நீ வாங்கி வந்த மதிப்பெண், வரைந்த ஓவியம், உடுத்திய உடை – இப்படி எல்லாமே அருமையாக இருக்கிறதே” – என்று பாராட்டிக் கொண்டே இருங்கள். அப்போது அந்தப் பிஞ்சு உள்ளத்தில் தன்னைப் பற்றிய நம்பிக்கை, இன்னும் இதை விடச் சிறப்பாகச் செய்யவேண்டுமென்ற சிந்தனையும் சாதனை எண்ணமும் ஆழமாக வேரூன்றும். ‘இனிய சொல் இரும்புக் கதவைக் கூடத் திறந்து விடும்’. அது போல நம்முடைய முதல் பாராட்டு நாளை நம் பிள்ளைகளை இந்த சமுதாயமே பாராட்டும் படி அமைக்கும். எனவே, பாராட்டை வீட்டிலிருந்தே தொடங்குங்கள்; அதைத் தொடருங்கள்.

ஒவ்வொரு இளைஞனுக்குள்ளும் ஓர் அற்புத ஆற்றல் ஓசையில்லாமல் மனதில் மறைந்திருக்கிறது. அதை உரிய முறையில் வெளிக்கொண்டு வருவது ஆசிரியர்களின் தலையாயக் கடமை. மாணவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ்ந்து காட்டும் திறமையை முதுகில் தட்டிக்கொடுத்து மேலோங்கச் செய்வது அவர்களின் அறப்பணி மட்டுமல்ல, அரும்பணியும் கூட.

உன்னதமான ஆசிரியர்கள் உள்ளத்தில் ஒளிபாய்ச்சுவார்கள். பாடசாலைப் பாடங்களைச் சொல்லிவிட்டு மட்டும் செல்பவராக இருந்துவிடக் கூடாது. கற்பித்த பாடம், சொல்லிய கருத்து மாணவர்களிடம் சென்றடைந்தனவா என்பதை ஆசிரியர்கள் கவனிக்கத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் வகுப்பறைகள் வெறும் “கண்ணுக்கு விருந்தாக - செவிக்கு உணவாக மட்டுமே காட்சி தரும். இறுதித் தேர்வு எனும் இரைப்பையை அது ஆட்சி செய்யாமல் போய்விடும்”. ஆசிரிய பெருந்தகைகள் மாணவர்களின் அறியாமை இருளை அகற்றும் வெளிச்ச தீபங்கள்; இளைஞர்களை இலட்சியப் பாதையில் நடைபயிலச் செய்யும் எழுச்சி தீபங்கள்.

“முகம் – வீட்டு முகவரியைக் காட்டும், செயல்கள் – வாழ்க்கைக்கு முகவரி காட்டும்”. ஒருவன் உயர்ந்தால் அது அவனுடைய பெற்றோருக்கு மட்டும் பெருமையல்ல. அந்த அளவுக்கு உயர, கல்வி எனும் அறிவு கண்ணைத் திறந்து வைத்த ஆசிரியர்களுக்கும் அதில் பெரும் பங்குண்டு. இளமைப்பருவம் வாழ்வின் வசந்த காலம். எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது இந்தப் பருவம் தான்.

உழைப்பால் வெற்றியை உருவாக்கு.

முயற்சியை அதற்கு எருவாக்கு.

வாழ்க்கை ஒரு கணிதம்

‘கணிதம் ஒரு புதிர் – வாழ்க்கையும் ஒரு புதிர்’. சிலருக்கு விடை கிடைத்து விடுகிறது. சிலருக்கு விடை கிடைக்காமலேயே போகிறது. அதற்காக ஒருபோதும் சோர்ந்து விடாதீர்கள். கீழ்க்கண்ட குறியீட்டைப் பயன்படுத்திப் பாருங்கள்.

நல்லனவற்றைக் கூட்டிக் கொள்
———> +

தீயவற்றைக் கழித்துக் கொள்
————-> –

அறிவைப் பெருக்கிக் கொள்
————> x

நேரத்தை வகுத்துக் கொள்
—————>%

வெற்றி, தோல்வியை சமமாகக் கொள் –> =

வெற்றியை எவ்வாறு சாதனையாக்குவது, தோல்வியை எப்படித் தோற்கடிப்பது என்பதை நூலகத்திலுள்ள நூல்களைப் படித்தால் ஆயிரக்கணக்கான நுட்பம் நிறைந்த வழிகள் புதையலாகப் புதைந்திருக்கின்றன. நல்ல புத்தகங்களை நேசித்து வாசிப்பதற்கு ஆகும் நேரத்தை விட, அதை யோசித்து தேர்ந்தெடுப்பதற்கு ஆகும் நேரத்தை நீட்டிக் கொள்ளுங்கள். “எட்டு மணி நேரத்தில் ஒரு மரத்தை வெட்ட வேண்டுமென எனக்கு கட்டளையிடப்பட்டால், அதில், ஆறு மணி நேரத்தை கோடரியை கூராக்குவதிலேயே செலவிடுவேன்”- என்றார் சரித்திர நாயகன் ஆபிரகாம் லிங்கன்.

‘‘கண்கள் தூக்கத்துக்கு சொந்தமானவை

கனவுகள் நம் வாழ்க்கைக்கு சொர்க்கமானவை’’

“ஒரு பவுண்ட் தேனை சேகரிக்க, தேனீ இருபது இலட்சம் மலர்களைத் தேடிச்செல்கிறது”. அது போல காலத்தால் அழிக்க முடியாத கனவு சுவடுகளைப் பதிக்க நினைக்கின்ற எனதருமை இளைஞர்களே! நம் நாட்டில் இலட்சக்கணக்கில் இளைஞர்கள் இருக்கின்றீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஓராயிரம் கனவுத் தொழிற்சாலைகள். இந்தக் கனவுகளுக்கெல்லாம் காரணம் டாக்டர் அப்துல் கலாம் தான். அவரின் போதனைகள் பல. உங்கள் மீது கடலளவு நம்பிக்கை வைத்திருக்கிறார். இந்தக் கலாமின் நம்பிக்கைக்கு ஒரு சலாம் சொல்லுங்கள்.

வாழ்க்கையை நேசிப்பவர்கள், நேரத்தை நிச்சயமாக நேசிப்பார்கள். ஏனெனில், வாழ்க்கை நேரத்தால் ஆனது. நேரத்தின் மதிப்புத் தெரியுமா? அப்படியானால் வாழ்க்கையின் மதிப்பும் தெரியும். தெரிந்திருக்க வேண்டும். இதோ! நேரத்தின் மதிப்பு என்னவென்று தெரிய ஒன்பது வழிகள்:

★ஒரு மில்லி செக்கண்டின் மதிப்பு என்னவென்று ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

★ஒரு விநாடியின் மதிப்பு என்னவென்று
விபத்தில் உயிர் தப்பியவரைக் கேளுங்கள்.

★ஒரு நிமிடத்தின் மதிப்பு என்னவென்று
தூக்கிலிடப்படும் கைதியிடம் கேளுங்கள்.

★ஒரு மணி நேரத்தின் மதிப்பு என்னவென்று
உயிர்காக்கப் போராடும் மருத்துவரிடம் கேளுங்கள்.

★ஒரு நாளின் மதிப்பு என்னவென்று – அன்று வேலை
கிடைக்காமல் போன தினக்கூலித் தொழிலாளரைக் கேளுங்கள்.

★ஒரு வாரத்தின் மதிப்பை அறிய ஒரு வார
பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள்.

★ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று
குறைப் பிரசவமான ஒரு தாயைக் கேளுங்கள்.

★ஒரு வருடத்தின் மதிப்பு என்னவென்று
தேர்வில் தோல்வியடைந்த மாணவனைக் கேளுங்கள்.

★ ஒரு வாழ்வின் மதிப்பு என்னவென்று
உலக சாதனையாளரிடம் கேளுங்கள்.

தனது அறியாமை என்னவென்று ஒரு மனிதன் அறிந்து கொள்வதிலும் புரிந்துகொள்வதிலும் தானே அவனது அறிவு பளிச்சிடுகிறது. விடா முயற்சி + கடின உழைப்பு + நுண்ணறிவு + தன்னம்பிக்கை = ஐ. எ. எஸ்., ஐ. பி. எஸ். எனும் வெற்றிக் கனியை ஒருவருக்கு கொடுக்கும். சாதிப்பதற்கு உங்களுக்கு தூண்டுகோலாக, ஊன்றுகோலாக இருக்கும் இந்தப் பழமொழி, பழுத்த மொழி.

என்னால் முடியாதெனில் வேறு யாரால் முடியும்?

இப்போது முடியாதெனில் வேறு எப்போது முடியும்?

சாதனையின் ஊற்றுக்கண் – இவ்வாக்கியத்தில் அடங்கியுள்ளது. இதைப் படிக்கும்போது உங்களுக்குள் ஓர் அபார ஆற்றல் கொண்ட சக்தி பிறந்திருக்குமே! “இது சிந்தனைத்துளி மட்டுமல்ல. உங்கள் வாழ்க்கையைச் செதுக்கும் உளியும் கூட”.

துயரங்களைத் தாங்கிக்கொண்டுதான் உயரங்களை எட்டிப் பிடிக்க முடியும். எல்லையற்ற வானமே எனது எல்லையென்று வாழ்க்கைக் கூட்டைக் கட்டுங்கள். உயர் சிந்தனைகளை சிந்தைக்குள் செலுத்தினால் வாழ்க்கை வளப்படும், உங்கள் வசப்படும்.

தீப்பந்தத்தைத் தலைகீழாகக் கவிழ்த்தாலும் மேல் நோக்கித் தான் சுடர் விட்டுப் பிரகாசிக்கும். அதுபோல மேலே மேலே முன்னேறிச் சென்றால்தான் வாழ்க்கையும் பிரகாசிக்கும்.

“படுத்துக் கிடப்பவனுக்கு பகல் கூட இரவு தான். எழுந்து நடப்பவனுக்கு திரும்பும் திசையெங்கும் கிழக்குத்தான்” – என்று எண்ணி எண்ணி ஏறுங்கள் மேலே சிகரம் பிறகு சின்னதாகி விடும் உங்களுக்கு.

மாணவர்கள், மாணவிகள், மகத்தான கல்வி ஞானம் பெற படைத்தவனிடம் பிரார்த்திப்போமாக!

நன்றி
உடையநாடு

## தவக்கால சிந்தனை

### இக்கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டியெழுப்புவேன்



அக்காலத்தில் யூதர்களின் பாஸ்கா விழா விரைவில் வரவிருந்ததால் இயேசு எருசலேமுக்குச் சென்றார். கோவிலில் ஆடு, மாடு, புறா விற்போரையும் அங்கே அமர்ந்திருந்த நாணயம் மாற்றுவோரையும் கண்டார். அப்போது கயிறுகளால் ஒரு சாட்டை பின்னி, அவர்கள் எல்லோரையும் கோவிலிலிருந்து துரத்தினார்.ஆடு மாடுகளையும் விரட்டினார். நாணயம் மாற்றுவோரின் சில்லறைக் காசுகளைக் கொட்டிவிட்டு மேசைகளையும் கவிழ்த்துப் போட்டார்.

அவர் புறா விற்பவர்களிடம், “இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள். என் தந்தையின் இல்லத்தைச் சந்தையாக்காதீர்கள்”– என்று கூறினார்.

அப்போது அவருடைய சீடர்கள், “உம் இல்லத்தின்மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்” – என்று மறைநூலில் எழுதியுள்ளதை நினைவுகூர்ந்தார்கள். யூதர்கள் அவரைப் பார்த்து, “இவற்றையெல்லாம் செய்ய உமக்கு உரிமை உண்டு என்பதற்கு நீர் காட்டும் அடையாளம் என்ன?” என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக அவர்களிடம், “இக்கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டியெழுப்புவேன்” – என்றார்.

## நக்கல் நமசிவாயம்

பொலிசுட்ட கள்ளன்மார் மாட்டுப்படுறது எப்படியென்று தெரியுமென்றபடியால தேசபந்து ஐயா நல்லாத்தான் ஒளிச்சு விளையாடுறார்...



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மாசி மாதம் 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** – குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகும்.

**ரிஷபம்** – குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலையடைவீர்கள்.

**மிதுனம்** – தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப்போனாலும் கிடைக் காது.

**கடகம்** – தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சிய டைவீர்கள்.

**சிம்மம்** – தொழில் மூலமாகப் பதவியுயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**கன்னி** – பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்கு மிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**துலாம்** – திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**விருச்சிகம்** – கூட்டு வியாபாரத்தில் கவனம் வேண்டும். மனக்கட்டுப்பாட்டுடன் தொழிலாற்றுவது நன்மை பயக்கும்.

**தனுசு** – நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய்,கடன், எதிரி இவை எதுமே பாதிப்பை ஏற்படுத்தாது.

**மகரம்** – புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும். மனம் கண்ட படி அலையும்.

**கும்பம்** – எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம். வீடு, வாகனம் விற்பது வாங்குவது கவனம்.

**மீனம்** – நீங்கள் கேட்காமலேயே நண்பர் களின் உதவிகள் கிடைக்கும். துணிச் சலால் அனைத்தையும் வெற்றி கொள் வீர்கள்.

| | |
|---|---|
| **திதி:** | அட்டமி மு.ப.9.18 வரை பின் நவமி |
| **நட்சத்திரம்:** | மிருகசீரிடம் மு.ப.11.32 வரை பின் திருவாதிரை |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம் :** | அமிர்த யோகம்; மு.இ.11.32 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை:** | மேற்குத் திசை நோக்கி சுபகாரியம் கூடாது. |
| **நல்ல நேரம்:** | காலை 6.20 – 9.20 மணி வரை காலை 10.20–10.50 மணி வரை பகல் 1.20 – 3.20 மணி வரை மாலை 5.20 – 6.20 மணி வரை |
| **ராகு காலம்:** | 10.50 – 12.20 மணி வரை |
| **எமகண்டம் :** | 3.20 – 4.20 மணி வரை |
| **குளிகை** | :7.50 – 9.20 மணி வரை |

**சந்திராஷ்டமம்:** துலாம் - விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (முற்பகல் 11.45 வரை துலாம் ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள் இன்று முற்பகல் 11.32 மணி வரை**

பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

இன்று முற்பகல் 11.32 மணிக்கு மேல்

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விஷேட தினம்:** **கச்சியப்பர் சிவாச்சாரியார் குரு பூசை**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# வடக்கு வைத்தியசாலைகளிலுள்ள குறைபாடுகளால் சிகிச்சைகள் பாதிப்பு

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை



வடக்கில் வைத்தியசாலைகளில் நிலவும் பல்வேறு குறைபாடுகளால் நோயாளர்களுக்கு முறையான சிகிச்சைகளை வழங்கமுடியாமல் இருப்பதாகவும் இது தொடர்பில் உரிய கவனஞ்செலுத்தி அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் இலங்கை தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பி.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (06) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

''வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் முழுமை பெறாமல் உள்ளன. இதற்காக 600மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அதனை சுகாதார அமைச்சிலிருந்து ஒதுக்குமாறு கோருகின்றோம். அத்துடன், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருதய, சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகளை இயங்கச்செய்ய வேண்டும். அதேபோன்று, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் விசேட மருத்துவப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. அவை முழுமையாக இயங்காத நிலையில் உள்ளன. இதற்கு காரணம் ஆளணி பற்றாக்குறையேயாகும். இதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையிலும் பல குறைபாடுகள் உள்ளன. அங்கே ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அங்கே கழிவுநீர் முகாமைத்துவம் மோசமாக உள்ளது. இது தொடர்பில் அமைச்சர் கவனஞ்செலுத்த வேண்டும்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் சிகிச்சை விடுதிக்கான கட்டிடம் இல்லாமல் இருக்கின்றது. தற்போது அங்கே 42 கட்டில்களுடனேயே நோயாளர்களுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன. 2017இல் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் அங்கே கட்டிடமொன்றை நிர்மாணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டாலும் அதற்கான நடவடிக்கைகள் மெதுவாகவே நடக்கின்றன. இது தொடர்பில் அமைச்சர் கவனஞ்செலுத்த வேண்டும். அத்துடன், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசலையில் ஆளணி தொடர்பான பிரச்சினைகள் உள்ளன. அதேபோன்று, மருந்துக் கலவையாளர்கள் விடயத்தில் 83 வெற்றிடங்கள் உள்ளன. வைத்தியர்கள் சிகிச்சையளிக்கும் பட்சத்தில் நோயாளர்களுக்கு முறையாக மருந்துகளைக் கொடுக்கக்கூடிய மருந்துக் கலவையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மன்னார் பொது வைத்தியசாலையில் சீடி ஸ்கேன் இயந்திரம் இல்லை. இங்கு முன்னுரிமை அடிப்படையில் அந்த இயந்திரத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வவுனியா மன்னார் எல்லையிலுள்ள இரணை இலுப்பைக்குளம் வைத்தியசாலையானது 50க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கையாளும் வைத்தியசாலையாகும். இந்த வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்'' - என்றார்.

# ஜனாதிபதிக்கும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையில் சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் கல்வியமைச்சின் அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று (06) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீடுகள் மற்றும் அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், கல்வித் துறையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் கவனஞ்செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பாக செயற்படுத்தவேண்டிய புதிய சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படவேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய, கல்வி, உயர்கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன, தொழிற்கல்வி பிரதியமைச்சர் நளின் ஹேவகே, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மீளத் திறப்பு

## பிரதியமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவிப்பு



யுத்தத்தின்போது பாதிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இன்று (07) வெள்ளிக்கிழமை மீண்டும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகப் பிரதியமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்தார்.

புதிய தலைவர் ஒருவரின் வழிநடத்தலுடன் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதுடன், 150 பேருக்கு அதன்மூலம் தொழில் வாய்ப்புகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (06) செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

''ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு காலங்களிலேயே யுத்தம் காரணமாக கைவிடப்பட்டது. அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு முதல் அந்தத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், அது சாத்தியப்படவில்லை. அந்த வகையில் கடந்த வருடம் திறைசேரி மூலம் 15 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொண்டு அதனை ஆரம்பிப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்தச் செயற்பாடுகளை விரைவாக முன்னெடுப்பதற்கு முடியாமல் போயுள்ளன.

எனினும், எமது அரசாங்கம் கடந்த நான்கு மாதங்களில் அந்த ஓட்டுத்தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பித்து புதிய தலைவரொருவரை நியமித்து அவரது தலைமையில் தற்போது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆரம்பநிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இன்று (07) இந்தத் தொழிற்சாலை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

வடக்கு மக்கள் குறைந்த விலையில் ஓடு மற்றும் செங்கற்களையும் அதன் மூலம் கொள்வனவு செய்து கொள்ள முடியும். 5,800 ஓடுகள் கொள்ளளவோடு 150 பேருக்கு தொழில் வாய்ப்புகளும் இதன்மூலம் கிடைக்கப்பெறுகின்றன. தேவைப்படும் மேலதிக நிதியை அமைச்சின் மூலம் பெற்று சாத்தியமான வகையில் வெற்றிகரமாக இந்தத் தொழிற்சாலையை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்''- என்றார்.

# ஊடக விதிமுறைகளை மீறிச் செயற்படும் இணையதளங்கள் மீது நடவடிக்கை எடுக்குக

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து



ஊடக ஒழுங்குவிதிகளை மீறி பல்வேறு நபர்கள் தொடர்பில் மிக மோசமான வகையில் விமர்சனங்களை முன்வைத்து செய்திகளை வெளியிடும் வெளிநாடுகளிலிருந்து இயங்கும் இணையதளங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கக்கூடியவாறு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (06) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த விவாதத்தில் செல்வம் எம்.பி. மேலும் கூறுகையில்,

''ஊடகவியலாளர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் வேறு வருமானங்களைத் தேடுமளவுக்கு அவர்களின் நிலைமை இல்லை. சேவைகளின் நிமித்தம் உயிர்நீத்துள்ளனர். சிவராம் போன்ற ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் விசாரணைகளை நடத்த வேண்டும்.

இதேவேளை, இணையதளங்களில் படு மோசமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒருவரை இல்லாமல் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதனூடாக அதனைச் செய்கின்றனர். என்னைப் பற்றியும் அவ்வாறு விமர்சனம் செய்துள்ளனர். இது தொடர்பில் சைபர் மோசடிப் பிரிவில் முறையிட்டாலோ, பொலிஸாரிடம் முறையிட்டாலோ அந்த இணையதளங்கள் வெளிநாட்டிலிருந்து இயங்குவதால் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்று கூறுகின்றனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகவேண்டியுள்ளது. பல முக்கியமானவர்கள் மீது பொய்யான வதந்திகள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கடினமாக உள்ளது. இதனால் இது தொடர்பில் கவனஞ்செலுத்தி இவ்வாறான விடயங்களுக்கு தண்டிக்கக்கூடிய நிலைமையை உருவாக்குமாறு கோருகின்றேன்'' - என்றார்.

# போதைப்பொருள் பாவனை அதிகரிப்பால் சுகாதாரத்துறைக்கு மறைமுகமான பாதிப்பு

## தடுக்க நடவடிக்கையெடுக்குமாறு பிரதி சபாநாயகர் கோரிக்கை



போதைப்பொருள் பாவனை நாட்டில் அதிகரித்துள்ளது. இது சுகாதாரத்துறைக்கு மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. பெண்கள் மத்தியிலும் இந்தப் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனைத் தடுப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (06) உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

அரச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்கும் நிலை இருந்து வருகிறது. இது மிகவும் கவலைக்குரியது. அவர்களில் அதிகமானவர்கள் நாட்கூலியில் வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றவர்கள். அதேநேரம், நீண்டநேரம் காத்திருக்க வேண்டி ஏற்படுவதால் அவர்களில் அதிகமானவர்கள் தங்களின் சிறுபிள்ளைகளை வீடுகளில் தங்கவைத்துவிட்டு வருகின்றனர். அதனால் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மக்கள் அரசாங்க வைத்தியசாலைகளை நம்பி வருகின்றனர். என்றாலும், கடந்த காலங்களில் அரச வைத்தியசாலைகளில் தரம் குறைந்த மருந்துகள் விநியோகிக்கப்பட்டன . இது மனித வர்க்கத்துக்கு எதிரான குற்றம். மன்னிக்க முடியாத குற்றம். எனவே, இதுவரை இடம்பெற்ற விடயங்களை மறந்துவிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

போதைப்பொருள் பாவனை நாட்டில் அதிகரித்துள்ளது. இது சுகாதாரத்துறைக்கு மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்த பிரதான காரணமாகவுள்ளது. குறிப்பாக, நகர்ப்புற மக்கள் இதனால் பாரியளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இது எமது குடும்பம் மற்றும் சமூகத்தில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது. பெண்கள் மத்தியிலும் இந்தப் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனைத் தடுப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் சுகாதாரத்துறைக்கு அரசாங்கம் போதுமான நிதியை ஒதுக்கியிருக்கிறது. குறிப்பாக, கர்ப்பிணித் தாய்மார்களின் சுகாதாரத்துக்காக 7.4 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. இதன் மூலம் திரிபோஷா வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சுகாதாரத்துறையில் பணியாற்றுகின்ற வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்து வருகின்றனர். குறிப்பாக, தாதியர்களில் அதிகமானவர்கள் பெண்களாகவே இருக்கின்றனர்.

எனவே, நாட்டின் சுகாதாரத்துறையை முன்னேற்ற நிலைக்கு கொண்டுவர நாங்கள் அனைவரும் முயற்சிக்க வேண்டும். அரசாங்கமும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வைத்தியர்கள் மற்றும் ஏனைய சுகாதாரத் துறையினருக்கு சம்பளத்தை அதிகரித்திருப்பது வரவேற்கத்தக்கது''- என்றார்.




**நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள், உங்களில் ஒருவர் மறந்து ஏதாவதொரு பொருளைச் சாப்பிட்டாலோ அல்லது பருகினாலோ அவர் தன் நோன்பை (தொடர்ந்து நோற்று) பூர்த்தி செய்யட்டும். நிச்சயமாக அல்லாஹ்தான் அவரை உண்ணவைத்தான் அவன்தான் அவரை பருக வைத்தான்.**

**(நூல் புகாரி, முஸ்லிம்)**

**நாங்கள் நோன்பு நோற்ற நிலையில் மறதியால் சாப்பிடும் போது அல்லது பருகும்போது தான் நோன்பு நோற்றிருப்பது நினைவுக்கு வந்தால் அந்தச் செயலை உடனே நிறுத்திவிட்டு, தொடர்ந்து நோன்பை நோற்க வேண்டும். நோன்பு முறியாது.**

**(தொழுகை நேரங்கள்)**
**(05ஆம் திகதி முதல் 09ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.06 |
| சூரிய உதயம் | - | 6.22 |
| ழுஹர் | - | 12.23 |
| அஸர் | - | 3.41 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |

# வாழ்க்கைப் பாடம்

**ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்**

## அன்பு நமது தாய்ப் பண்பாக அமையட்டும்!

***இறைவனுடைய திருநாமங்களிலே அல்லாஹ் என்ற நாமத்துக்கு நிகரான - சமமான மற்றொரு நாமம் இல்லை. இருந்தால் இருப்பது ஒரேயொரு நாமம் தான். அதுதான் அர்-ரஹ்மான் என்ற நாமம்.***

***இதனை அல் - குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.***

***"நீங்கள் அல்லாஹ் என்று அழையுங்கள்;அல்லது ரஹ்மான் என்று அழையுங்கள் என்று நபியே நீங்கள் கூறுங்கள்.***

***ரஹ்மான் என்றால் அளவற்ற அன்பாளன்- அருளாளன் என்பது பொருள்.***

***அல்லாஹ்வுக்கு பல பண்புகளும் திருநாமங்களும் இருந்தாலும் அவை அனைத்தையும் மிகைத்த அவனது அடிப்படைப் பண்பாக விளங்குவது அன்பு என்ற பண்புதான்.***

***நபி (ஸல் )அவர்கள் குணத்தின் குன்றாக,பண்பாட்டின் சிகரமாக இருந்தவர்கள். ஆயினும், அவர்களின் தாய்ப்பண்பாக இருந்தது அன்புதான்.***

***அன்பே உலகை ஆள்கின்றது. ஆள வேண்டும்.***

***எல்லா நற்பண்புகளும் அன்பின் அடியாகப் பிறப்பவைதான். பாசம், காதல்,நட்பு,நேசம்,மன்னிப்பு,ஈகை,கொடை,சகிப்புத்தன்மை முதலான எல்லா பண்புகளும் அன்பின் வெளிப்பாடுகளே.மனித உலகமும் மிருக உலகமும் அன்பினால்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன.***

***"இறைவன் அன்பை-கருணையை நூறு பாகமாக அமைத்துள்ளான். அவற்றில் தொண்ணூற்று ஒன்பது பாகத்தை தன் வசம் வைத்துக்கொண்டு ஒரு பாகத்தை மட்டும் பூமியில் இறக்கி வைத்தான். இந்த ஒரு பாகத்திலிருந்து தான் படைப்பினங்கள் தங்களுக்கிடையில் இரக்கம் காட்டி வருகின்றன. குதிரை தனது குட்டியை மிதித்துவிடலாமென அஞ்சி தனது கால் குளம்புகளை, அதனை விட்டும் உயர்த்துவதும் அந்த ஒரு பாகத்துக்குட்பட்டதே" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.***

***இந்த வகையில்***

***கணவன் - மனைவி உறவு,பெற்றோர்-பிள்ளை உறவு, உற்றார்- உறவினர்களுடனான உறவு, ஆசிரிய - மாணவ உறவு, முதலாளி - தொழிலாளி உறவு உட்பட எல்லா மனிதர்களுடனான உறவும் அன்பை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும்.***


***"அன்பு காட்டுபவரே சுவனம் நுழைவார்" - என்று நபியவர்கள் சொன்னபோது தோழர்கள்,''நாங்கள் எல்லோரும் அன்பு செலுத்துபவர்களே" - என்றார்கள். அதற்கு அன்னார், "நீங்கள் உங்களோடு இருப்பவருக்கு காட்டும் அன்பை நான் சொல்லவில்லை. மாறாக,விதி விலக்கில்லாமல் அனைவர் மீதும் காட்டப்படவேண்டிய அன்பையே நான் இங்கு சொல்ல வந்தேன்" - என்றார்கள்.***

***எனவே, அன்பை எமது தாய்ப்பண்பாக அமைத்துக்கொள்வோம்.வீட்டிலும் வீதியிலும் தொழில் பார்க்கும் இடத்திலும் எல்லோரையும் கருணைக்கண்கொண்டு பார்ப்போம்; அன்பாக அணுகுவோம்;பாசத்தோடும் நேசத்தோடும் பழகுவோம்.***

***அன்புள்ளம் கொண்டவர்களே ஈருலகிலும் அல்லாஹ்வின் அருளை பெறத்தகுதியுடையவர்கள் என்ற பேருண்மையை உணர்ந்து செயற்படுவோம்.***

# மார்ச் 8 மகளிர் தின வாழ்த்துகள்

# உலகம் போற்றும் பெண்ணியம்




பெண் என்பவள் வையகத்தின் இரு விழிகளின் இமைகள் என கூறினால் மிகையில்லை. சங்ககாலம் முதல் பெண் என்பவள் புலவர்களாலும் அறிவியலாளர்களாலும் போற்றப்பட்டவளாகவே காணப்படுகிறாள். இவ்வுலகில் பெண் எனப்படுபவள் மகளாகவும் சகோதரியாகவும் மனைவியாகவும் தாயாகவும் தனக்கு வழங்கப்பட்ட கதாபாத்திரத்தை ஏற்று அதன்படி பிரதிபலிக்கின்றாள். பெண்களை முக்கியத்துவப்படுத்தும் முகமாக பெண் தெய்வ வழிபாடுகளும் காலாகாலமாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

பெண்ணுலகின் பெருமைக்கு எதிரான கட்டுப்பாட்டு விதிமுறைகள் சமுதாயங்களில் சற்றே தோன்றி மறைகின்றன. இவ்வாறான அகக் கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்ட பெண்கள் அடிமைகளாகவே வாழ்ந்தனர். உயிரைக் கொடுத்து தாய்மை பட்டத்தை சூடிக்கொள்ளும் பெண்மை போற்றப்பட மதிக்கப்பட வேண்டியவளே. பெண்ணின் பெருமையை மெருகூட்டும் நாற்குணங்களும் பெண்களின் அடக்குமுறைகளாக இருக்கலாம் என்பது பல அறிஞர்களின் கருத்தாக இருக்கின்றன. அதாவது,

அச்சம் - என்பது பயத்தை உணர்த்துகிறது

மடம் - இது மடமை என பொருள்படுகின்றது

நாணம் - இது வெட்கத்தை குறிக்கின்றது

பயிர்ப்பு - கூச்ச உணர்வை குறிக்கின்றது

எனவே, இவ்வகையான போர்வைகளை தகர்த்து சமுதாயத்தில் தமக்கென ஒரு இடத்தை தக்க வைத்துக்கொண்ட பெண்மணிகள் எம் சமூகத்தில் உள்ளனர் என்றால் மிகையில்லை. எனவே இவ்வகை குணங்களைக் கொண்ட பெண்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

இதிகாசங்களும் புராணங்களும் பெண்களை மையப்படுத்தியே அமைக்கப்பட்டுள்ளன. இவை பெண்களின் முக்கியத்துவம் பற்றியும் அவர்களின் சுதந்திரம் பற்றியும் பெண் அடக்குமுறைகள், பெண்கள் தொடர்பான வன்முறைகள் பற்றியும் கூறுகின்றன. ஆரம்பகாலங்களில் பெண்கள் குடும்பத் தலைவிகளாக மட்டுமே இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்ட ஒன்றாக காணப்பட்டது. அடுப்படியே உலகம் என்று இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அறியாமை எனும் இருளால் சூழப்பட்டு வாழ்ந்தனர். இவ்வாறான தடைக்கற்களையும் உடைத்தெறிந்து விண்ணைத்தாண்டி சாதனைப் புரிந்த பெண்கள் பற்றியும் வரலாறுகள் கூறுகின்றன.

இவ்வகையான கோட்பாடுகளுக்கிடையில் எமது சமூகத்தில் பெண்கள் சுதந்திரமாக வாழ்கின்றனரா என்பது ஐயப்பாடான விடயமாக காணப்படுகின்றது. இலை மறை காயாக அடக்குமுறைகளுக்குள் இன்னமும் ஒரு சில பெண்கள் வாழ்கின்றனர். பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் பெண்களில் சிலர் பல்வேறு இன்னல்களை சந்திக்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் பெண்களின் உரிமைகள் முழுமையாக அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்றதா என்பது சந்தேகத்துக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

தனது குடும்ப பொறுப்புகளை தோளில் சுமக்கும் பெண்களில் பலர் இன்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர். பெண்களின் உரிமைகளுக்காக பல்வேறு அமைப்புகள் செயற்படுகின்றபோதிலும் நாட்டின் பல இடங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்களின் தலைமைத்துவம் மேன்மைப்படுத்தப் பட்டாலும் பல பெண்கள் அடிமைகளாகவே காணப்படுகின்றனர்.

**பால்நிலை சமத்துவமும் பெண்களின் முக்கியத்துவமும்**

சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வெவ்வேறு உரிமைகள் மற்றும் பொறுப்புகள் அவர்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் சமூக, கலாசார நியமங்களை புரிந்துகொண்டு செயற்படுதல் பால்நிலை சமத்துவத்தில் உள்ளடக்கப்படுகின்றது. ஆண்களைப் போன்ற அதே மட்டத்தில் பெண்களுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் பால்நிலை அடிப்படையிலான வித்தியாசத்தையும் பாகுபாட்டையும் அகற்றுவதும் இதன் பிரதான நோக்கமாகும். அதுமட்டுமன்றி இனம், சமயம், பாலியல் நாட்டம், வயது, வருமானமட்டங்கள், வதிவிடங்கள் ஆகியவற்றிலும் வேறுபாடுகள் காட்டுவதை அகற்றுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

எனவே, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இந்த மகளிர் தினத்தில் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும்.



**முருகையா தவமணி தேவி,**
**வட்டகொட.**

# மகளிரை மதிப்போம்



ஒவ்வொரு பெண்களும் இந்தக் காலத்தில் பலவிதமான பிரச்சினைகளை தோளில் சுமக்கின்றனர். குடும்பப் பெண்கள் ஒவ்வொருக்கும் வித்தியாசமான பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்கு முக்கியமான காரணம் எமது சமுதாயத்தில் இருக்கின்ற புரையோடிப்போன, பழைய, ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லாத நம்பிக்கைகளும் அதற்கு அடிப்படையாக இருக்கின்ற கலாசாரங்களுமேயாகும். ஆனால், உண்மையிலேயே பெண்ணும் ஆணைப்போலவே சுயமான உணர்வுகள், அன்பு என அனைத்தும் தேவைகொண்ட ஒரு மனித பிறவித்தான் என்பதை அதிகமானோர் மறைக்கின்றனர் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள சமுதாய மருத்துவ நிபுணர் யோசபீன் திருமகள் சிவசங்கர் தெரிவித்தார்.

மகளிர் தினத்தை பெருமைப்படுத்தும் பெண்களுக்கு தனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்த அவர், விசேடமாக சமுதாயத்தில் பெண்களின் வகிபாகம் தொடர்பிலும் கருத்துரைத்தார்.

''பெண்கள் பலவிதமான இம்சைக்கு ஆளாக நேரிடுகின்றது. எல்லோரையும் பொதுவாக சொல்லவில்லை. படித்த பெண்களோ படிக்காத பெண்களோ தங்களுக்கு நடக்கின்ற அநியாயங்களை அநியாயம் என்று தெரிந்தும் வெளியே சொல்லாமல் அப்படியே மடிந்து போகின்றார்கள்.

இதன்மூலம் தற்காலப் பெண்கள் தெரியவேண்டியது என்னவென்றால், தங்களுக்கு வாழ - சிரிக்க - நடக்க - சாப்பிட உரிமை உண்டு. அதற்காக கலாசாரத்துக்குப் புறம்பான தவறான நடத்தைகளை நான் குறிப்பிடவில்லை. பெண்கள் அவர்களின் குடும்ப வாழ்க்கையிலாவது, தனிப்பட்ட வாழ்க்கையிலாவது அவர்களுக்கென்று இருக்கின்ற இலக்குகளை அடையவேண்டும்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான விருப்பங்கள் இருக்கலாம். சிலருக்கு சங்கீதத்திலோ அல்லது திறமையான வேறு துறைகளிலோ விருப்பங்கள் இருக்கும். அதற்கு அவர்களுடைய எதிர்கால அல்லது தற்கால துணைகள் முன்வந்து உதவ விரும்புகிறார்களா என்பதை அவர்கள் திருமணத்துக்கு முன்பாக கதைத்து முடிவெடுக்கவேண்டியது நல்லது.

தங்களுடைய துணைகளுடன் பிரச்சினைகள் வரும்போது அதனை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும். அதற்கான உதவிகளை அவர்கள் நாடவேண்டும். எமது நாட்டிலே சில வைத்தியசாலைகளிலே நட்பு நிலையங்கள் இருக்கின்றன. மிகவும் இரகசியமான முறையிலே அவர்களுக்குப் பலவிதமான உதவிகளைச் செய்வதற்கு அவர்கள் காத்திருக்கிறார்கள். ஆனால், பெண்கள் முன்வருவதில்லை.

சில சமயங்களிலே முன்வரும் பெண்களுக்கு சரியான உதவி அவர்களிடமிருந்து கிடைப்பதில்லை என்பதும் உண்மைதான். பல பெண்கள் இந்த விடயத்தைத் தெரியாமல் இருக்கிறார்களா அல்லது தெரிந்தும் போகாமல் இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. இதனாலேயே தங்களுக்குத் தேவையான உதவி என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

பெண்களுக்கு வீட்டிலோ அல்லது வேலைத்தளங்களிலோ அவர்களுக்கு எதிரான செயற்பாடுகள், இம்சைகள் நடக்குமானால், அதற்கேற்ற தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு பல்வேறு இடங்களில் உதவிகள் உண்டு. முக்கியமாக, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு பல இடங்களில் இருக்கின்றது. அவசர தொலைபேசி இலக்கங்கள் இருக்கின்றன. அந்த அவசர இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு அவர்கள் உதவிகளை நாடலாம். அவசர சேவை என்ற ஓர் அமைப்பு உள்ளது. அவர்களிடமும் தங்களுக்குத் தேவையான இலவசமான சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

சிறு பெண்பிள்ளைகள் கட்டாயமாக 18 வயது வரை பாடசாலையில் படித்து நல்லறிவைப் வளர்த்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற சில மாவட்டங்களிலே பெண்கள் அறிவு குறைந்தவர்களாக உள்ளனர். ஆண்கள் என்ன செய்தாலும் அவர்களை சார்ந்தே இருக்கிறார்கள். ஒருவரை சார்ந்திருக்கின்ற அந்தத்தன்மையை வைத்தே சில பெண்கள் அடிமைகளாக வாழ்கின்றனர். மேலும், தாயானவள் தனது பெண் பிள்ளைகளை மிகவும் கவனமாக படிப்பித்து அவர்களை தமது சொந்த கால்களில் வாழக்கூடிய தைரியத்தை வளர்க்க வேண்டும்.

சிறு பெண் பிள்ளைகளுக்கு அவர்களின் ஆரம்ப கல்வியின்போதே தவறான தொடுகை எது, சரியான தொடுகை, தவறான தொடுகை எனின், அதை யாருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். எவ்வாறு அதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

அதேநேரம், ஆண்பிள்ளைகளுக்கும் பெண்களை இம்சைப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்பதை அவர்களது சிறுபராயம்முதல் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். அப்போதுதான் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், சமுதாய அடிப்படையான பாகுபாடுகள், பிரிவினைகளை ஒழிக்க முடியும்.

பெண்களும் ஆண்களும் சமுதாயத்தில் சமமானவர்கள் என்ற சிந்தனையை வளர்க்க முடியும். பெண்களை இன்னொருவர் உருவாக்குவது அல்ல. தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதுவே அவர்களின் தன்னம்பிக்கையாகும்'' என்றார்.



**சமுதாய மருத்துவ நிபுணர்**
**யோசபீன் திருமகள் சிவசங்கர்**
**கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்**

# எதிர்காலத்தை வடிவமைக்கும் மகளிர்



உலகெங்கும் வாழ் மகளிர் அனைவருக்கும் சர்வதேச மகளிர் தின நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

சர்வதேச மகளிர் தினத்தை நாம் கொண்டாடுவதற்கு காரணகர்த்தாவாக பாரிய பங்களிப்புச் செய்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கிளேரா ஷெட்கினுக்கு நன்றி. உலகிலே மனிதர்களால் உருவாக்கப்பட்ட விழாக்கள், கொண்டாட்டங்கள் பல உள்ளன. எல்லாவற்றுக்கும் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். அன்னையர் தினம், தந்தையர் தினம், சிறுவர் தினம், ஆசிரியர் தினம், மகளிர் தினம், முதியோர் தினம் எனக் கூறிக்கொண்டே போகலாம்.

எந்தத் தினமாகிலும் கொண்டாடப்படுவது பாராட்டுக்குரிய விடயமாகும். ஆனால், அன்றைய தினத்தில் மாத்திரம் அப்பிரிவினரை கௌரவித்து பாராட்டி, புகழ்ந்து, மகிழ்வித்து விட்டு அத்துடன் மறந்துவிடுவதல்ல. தினமும் மனதில் வைத்துக் கொண்டாடப்பட வேண்டும்.

பெண்கள் நாட்டின் கண்கள் என்ற கூற்றுக்கிணங்க அவர்கள் வீட்டுக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆற்றும் அளப்பரிய சேவைகளையும் வகிபங்கையும் எடுத்துக்கூறுவதாயின், அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

பாசமிகு அன்னையாக, மகளாக, மனைவியாக, ஆசானாக வழிகாட்டியாக பல்நிலைகளில் தம் கடமை தவறாது செயற்படுகின்றனர். தம் பணியாலும் சேவையாலும் சிகரம் தொட்டு மக்கள் மனதில் நிலையான இடத்தை தக்கவைத்துக்கொண்ட பெண்கள் பலர் உள்ளனர். நாம் அறிந்தவர்களுள் ஒருசிலர் அன்னை திரேசா, மலாலா யூசுஃப்சாய், மேரி கியூரி, மாகிறட் தட்சர், எலிசபெத் மகாராணி, சுனிதா வில்லியம்ஸ் மற்றும் நம் நாட்டின் புகழ்பெற்ற பெண்மணிகளான முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தற்போதைய அரசில் பிரதமரும் கல்வியமைச்சராகவும் திறம்பட சேவையாற்றிக்கொண்டிருக்கும் கலாநிதி ஹரிணி அமரதுங்க ஆகிய ஒருசிலரை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். இவர்களைப் போன்ற பல சாதனையாளர்கள் இன்னும் பல பேர் உள்ளனர்.

பெண்கள் பல்துறை விற்பன்னர்களாக சிறப்பாகச் செயற்படும் ஒரு சில துறைகளை குறிப்பிட விரும்புகின்றேன்

ஜனாதிபதிகளாக, பிரதமர்களாக, நிறுவனங்களின் தலைவர்களாக, ஆசிரியர்களாக, அதிபர்களாக, கல்விப்பணிப்பாளர்களாக, விரிவுரையாளர்களாக, வைத்தியர்களாக, தாதியர்களாக, பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, ஊடகவியலாளர்களாக, விமான ஓட்டிகளாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக எனக் கூறிக்கொண்டே போகலாம்.

சுயதொழில்கள் மேற்கொண்டு நாட்டுக்கு தங்களது பங்களிப்பை சிறப்பாக வழங்கிக்கொண்டிருக்கும் பெண்மணிகளை மறந்துவிட முடியாது. பல பெண்கள் நம் நாட்டின் எல்லைகளைத் தாண்டி சர்வதேச மட்டத்திலும் சாதனைப்படைத்துக் கொண்டுள்ளனர். அனைத்துப் பெண்களும் நாட்டின் பொருளாதாரத்துக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றனர். தம் வீட்டுப் பொறுப்புகளை சரிவரச் செய்து குடும்பத்துக்காக தம் காலத்தையும் நேரத்தையும் வழங்கி அளப்பரிய சேவையாற்றும் பெண்மணிகளும் இதில் அடங்குவர். அனைத்து பெண்களும் பாராட்டுக்குரியவர்களாவர்.

பெண்ணுரிமை, சமத்துவம் என போராட்டங்களின் மத்தியில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டு பெண்களுக்கு முழுமையான பூரண சுதந்திரம் கிடைத்திருக்கின்றதா என வினவினால் இல்லை என்றே கூறவேண்டும்.

காரணம், பல நாடுகளில் பெண்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. பெண்கள் துன்புறுத்தப்படுதல், பல வழிகளில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுதல், ஆண் ஆதிக்கத்தாலும் ஒடுக்குமுறைகளாலும் அவதியுறும் பெண்களின் அவலநிலையை உற்றுநோக்கும்போது மனவேதனை தருகின்றது.

இன்று உலகிலே தனிமையில் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் இதயங்கள் ஏராளம். இன்றைய நவநாகரீக உலகிலே விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. நாளுக்கு நாள் புதுப்புது கண்டுபிடிப்புகளென மனிதன் சாதனை படைத்துக்கொண்டே செல்கின்றான். இவை எல்லாவற்றிலும் பெண்களின் பங்களிப்பு உண்டு.

**என்னைப் பற்றிய சிறு விளக்கம்**

நான் ஓர் ஆங்கில மொழி ஆசிரியையாக என் தொழில் வாழ்க்கை ஆரம்பமானது. இறை நம்பிக்கை, அர்ப்பணிப்பு, நேர்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, சிறந்த தொடர்பாடல் திறன்கள், தெகிழ்வுத்தன்மை, தன்னம்பிக்கை, ஆர்வத்தோடு கற்றல் போன்றவை படிப்படியாக முன்னேற்றப்பாதையை நோக்கிச்செல்ல வழிவகுத்தது. ஆசிரியையாக இருந்த நான் ஓர் உளவளத்துணை ஆசிரியராக தேர்ந்துகொள்ளப்பட்டு பல பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றி எனது கடமைகளை மேற்கொண்டேன். பின்பு மேல்மாகாண சிரேஷ்ட பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி முன்னேறிச்சென்று மேல் மாகாண உள-சமூக வளநிலைய உதவி முகாமையாளராக பணியாற்றினேன். கல்வி அமைச்சின் தேசிய வளவாளராக நாடுமுழுவதும் ஒழுங்கு செய்யப்பட்ட உளவளத்துறை பயிற்சிப்பட்டறைகளை செய்திருக்கின்றேன். எனக்கு அன்னையாக, ஆசானாக, வழிகாட்டியாக இருந்த என் அன்புக்கும் பாசத்துக்கும் மரியாதைக்கும் உரிய அருட்சகோதரி மேரி பிறியட் (திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்) என் வளர்ச்சிக்கும் பணிகளுக்கும் அவ்வப்பொழுது பாராட்டுகள் தெரிவித்து என்னை ஊக்கப்படுத்தி தொடர்ந்தும் இவைகளில் முன்னேறிச் செல்ல உதவிகள் பல வழிகளில் செய்து ஊக்கமும் ஆக்கமும் அளித்த அனைவரையும் என் இதயத்தில் நினைத்து நன்றி கூறுகின்றேன்.

விசேடமாக, என் அக்கா எப்போதும் எனக்கு நம்பிக்கையூட்டி, தைரியப்படுத்தி பல வழிகளில் ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கிக்கொண்டே இருப்பவர்.

தற்போது ஓய்வுபெற்றிருந்தாலும் எனது பணி தொடர்கின்றது. தனது வீட்டுப்பொறுப்புகளை சரியாக செய்து குடும்பத்துக்காக தனது காலத்தையும் நேரத்தையும் வழங்கி அளப்பெரிய சேவையாற்றும் அனைத்து பெண்மணிகளுக்கும் எனது பாராட்டும் வாழ்த்துகளும். அவர்கள் இன்னும் மென்மேலும் வாழ்வில் வளர இறைவனை பிரார்த்திக்கிறேன்.



**திருமதி மேரி அனபெல் ரட்ணதுரை**
**(Psycholoyical Counselar & career Counsellar)**

**எஸ்.நிசாந்தி**

# புதூரில் குமார் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இருவர் ஐஸ் போதைப்பொருள், கூரிய ஆயுதங்களுடன் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, புதூர் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் குமார் குழுவைச்சேர்ந்த இருவரை புதன்கிழமை (05) இரவு கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

குறித்த பிரதேசத்தில் இரு குழுக்கள் இயங்கி வருகின்ற அதேவேளை, வாள்வெட்டு மற்றும் சண்டைகளில் ஈடுபட்டு வந்துள்ளன. இக்குழுவினர் பல்வேறு குற்றச்செயல்களில் தொடர்புபட்டு தலைமறைவாகி வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ரி.கிருபாகரன் தலைமையிலான குழுவினர் சம்பவதினம் இரவு குறித்த பிரதேசத்தில் இக்குழுவினர் தலைமறைவாகியிருந்த வீட்டை முற்றுகையிட்டு அங்கு 3,100 மில்லிகிராம் ஐஸ்போதைப்பொருளுடன் ஒருவரும் கூரிய ஆயுதங்களுடன் ஒருவருமாக இருவரைக் கைது செய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் குமார் குழுவைச் சேர்ந்தவர்களெனவும் பிரதேசத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி வருபவர்கள் எனவும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

‘நீதிக்கான நடைப்பயணத்தின் 1030ஆவது நாள் போராட்டம்’

# வடகிழக்கு மக்களுக்கு அன்றுமுதல் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை

## மக்கள் பேரவைக்கான இயக்க செயற்பாட்டாளர் வண.பிதா ஜீவநந்த பீரிஸ்

(கனகராசா சரவணன்)

‘‘வடக்கு, கிழக்கு மக்களுக்கு அன்று முதல் இன்று வரை நீதி கிடைக்கவில்லை. தற்போது புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இம்மக்களின் பிரச்சினையை இன்னும் செவி மடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே, இந்த அசாதாரண நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காக உண்மையான மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக நாங்கள் தொடர்ந்து போராட்டங்க முன்னெடுத்து வருகின்றோம்’’ - என மக்கள் பேரவைக்கான இயக்க செயற்பாட்டாளர் வண.பிதா ஜீவநந்த பீரிஸ் தெரிவித்தார்.

நீதிக்கான நடைப்பயணத்தின் 1,030ஆவது நாள் ஆர்ப்பாட்டப்பேரணி மட்டக்களப்பு, கல்லடி பாலத்திலிருந்து காந்தி பூங்காவரையும் நேற்று வியாழக்கிழமை (06) இடம்பெற்றது.மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் உறுப்பினர்கள், பௌத்ததேரர்கள் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘‘காலிமுகத்திடல் அரகலய போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து மட்டக்களப்பு நகரில் நீதிக்கான






பயணம் தொடர்ந்து 1,030 ஆவது நாளாக இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில், வடக்கு, கிழக்கிலுள்ள மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அவர்களுக்கான இடங்கள் அன்று முதல் இன்றுவரை கிடைக்கவில்லை. அனைத்து மக்களையும் விட அதிகமாக வடகிழக்கு மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

அந்த மக்களின் நோக்கத்தை தற்போது புதிதாக வந்துள்ள இந்த அரசாங்கம் கூட இன்னும் செவிமடுக்காத நிலையில் இருக்கின்றது. எனவே, அந்த மக்களின் நோக்கத்துக்காக மக்கள் பேரவைக்கான இயக்கமாகிய நாங்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து போராடி வருகின்றோம். அதை வலியுறுத்துவதற்காக இந்தத் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்திக்கொண்டிருக்கின்றோம். இந்த அசாதாரண, நியாயமில்லாத இந்த முறையை மாற்றுவதற்காக உண்மையான மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக மக்களாகிய நாங்கள் ஒன்றுபடவேண்டும்’’ - என்றார்.

# பழுதடைந்த 71கிலோ பாரை மீன்கள் பறிமுதல்



(பாண்டிருப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, ஒந்தாச்சிமடம் பொதுச்சந்தைக்கருகில் கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனமொன்றில் கொண்டு செல்லப்பட்ட பழுதடைந்த மனித பாவனைக்குதவாத 71கிலோகிராம் பாரை மீன்கள் புதன்கிழமை(05) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் தலைமையில் குறித்த வாகனம் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டபோதே பழுதடைந்த நிலையில் குறித்த மீன்கள் கைப்பற்றப்பட்டது. இவர்களுக்கு எதிராக களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், குறித்த குற்றவாளிக்கு 05 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 06 மாதகால கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் 18,000ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரிக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் துறைமுகத்தை விரைவில் அபிவிருத்தி செய்து மீன்பிடித்தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுங்கள்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

‘‘நாட்டில் அதிகமான மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்படும் கிழக்கு மாகாணத்தில் முறையான துறைமுகம் ஒன்றுகூட இல்லை. அதனால் ஒலுவில் துறைமுகத்தை விரைவாக அபிவிருத்தி செய்து அந்தப் பகுதி மீனவர்களின் மீன்பிடித் தொழிலை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை(05) நடைபெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு, கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சுகளின் நிதியொதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

‘‘நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்துவரும் கடற்றொழில் அமைச்சுக்கு கடந்த அரசாங்கமோ இந்த அரசாங்கமோ முக்கியத்துவம் வழங்கவில்லை. வரவு - செலவுத் திட்டத்தில் மிகவும் குறைவான தொகையே இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஒலுவில் துறைமுகத்தை மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அமைச்சராக இருந்து வர்த்தகத் துறைமுகமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால், தற்போதுள்ள ஆட்சியாளர்கள் அதனைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அது தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது.

என்றாலும், கடந்த ஆட்சியில் மீன்பிடி அமைச்சு அந்தத் துறைமுகத்தின் ஒருபகுதியைப் பொறுப்பெடுத்து செயற்பட்டதால் தற்போது அதனை மீன்பிடித்துறைமுகமாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. இருந்தாலும், அங்குள்ள மண்ணை அள்ளுவதற்காக அந்தப் பகுதி மீனவர்கள் பல இலட்சம் ரூபா செலவழித்துள்ளனர். எனினும், அந்தத் துறைமுகம் இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருக்கிறது. அதனால் வர்த்தமானி செய்யப்பட்டிருக்கும் பகுதியை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்முனை பகுதியில் 250க்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் இருக்கின்றன. அந்த மீனவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கிலோமீற்றர் பயணித்து வாழைச்சேனை துறைமுகத்தையே பயன்படுத்தி வருகின்றனர். தென் மாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் துறைமுகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாட்டில் அதிக மீன்பிடித்தொழில் மேற்கொள்ளப்படும் கிழக்கு மாகாணத்தில் ஒரு துறைமுகம்கூட முறையாக இல்லை. அதனால், ஒலுவில் துறைமுகத்தில் தேங்கியிருக்கின்ற மண்ணை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த மண்ணை அகற்ற நடவடிக்கை எடுத்தால் 500க்கும் மேற்பட்ட படகுகளை அங்கு நிறுத்த முடியுமாக இருக்கும். அதேபோன்று, வாழைச்சேனை துறைமுகமும் ஒரு மீன்பிடித் துறைமுகத்துக்குரிய எந்தவித வசதியும் இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கு வசதிகள் இல்லாமையால் 300க்கும் மேற்பட்ட படகுகள் வெளியில் கட்டப்படுகின்றன. அதனால் இந்தத் துறைமுகத்தையும் விரைவாக அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம், மட்டக்களப்பு, பூநொச்சிமுனை இறங்குதுறை பிரச்சினைக்குத் தீர்வாக மிதக்கும் இறங்குதுறை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, அரசாங்கத்துக்குத் தேவையான உதவிகளை வெளிநாடுகளிடமிருந்து பெற்றுத்தரத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

# பொதுக்கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(ஏறாவூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு – ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் வயற்பிரதேசத்திலுள்ள பொதுக்கிணற்றிலிருந்து கடந்த புதன்கிழமை (05) 67 வயதுடைய வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா தவராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீண்டநாட்களாக நோயினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் சம்பவதினம் மதியம் தொடக்கம் காணாமல் போயிருந்துள்ளார். இதையடுத்து, குடும்ப உறவினர்கள் தேடியபோது வீட்டிலிருந்து சுமார் 300மீற்றர் தொலைவிலுள்ள பொதுக் கிணற்றுகருகில் செருப்பு காணப்பட்டதை அவதானித்துள்ளனர். பின்னர் நீளமான தடியொன்றை கிணற்றில் விட்டுப்பார்த்தபோது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் சம்பவ இடத்துக்குச் சென்று முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயித்தியமலை பொலிஸார் இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்டூர் 37 நவகிரி வித்தியாலயத்தில் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் அதிபர் எஸ்.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவஞானம் சிறிதரனும் சிறப்பு அதிதிகளாக சாதனை படைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது நூல் வெளியீடு மற்றும் கட்டிடத் திறப்பு விழா என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வின்போது இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றியீட்டியோர் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (துறைநீலாவணை செய்தியாளர்)



திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுக்குளம் வயல் பகுதியில் யானையொன்று நேற்று(06) உயிருடன் வீழ்ந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. யானை வீழ்ந்த காரணம் இன்னும் கண்டறியப்படவில்லையெனவும் வனவிலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிகிச்சை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (பதுர்தீன் சியானா)

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சி



(குருக்கள்மடம் செய்தியாளர்)

2025ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ‘நிலையான நாளையை உருவாக்குதல், அவளுடைய பலமே பாதை’ என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு மார்ச் 02 முதல் 08வரை தேசிய மகளிர் வாரம் கொண்டாடப்படுகின்றது.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் வார நிகழ்வுகளானது பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில், பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருட்களை மேம்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்த விற்பனைக் கண்காட்சியானது புதன்கிழமை(05) பிரதேச செயலக முன்றிலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 30க்கும் அதிகமான உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு, கலந்து கொண்டோரினால் பெருமளவான உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் செலுத்தியமையை காணக்கூடியதாக இருந்தது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் உட்பட ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வெல்லாவெளியில் தூக்கிட்டு இளைஞன் தற்கொலை

(மண்டூர் செய்தியாளர்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுணையங்கல்லு பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.இச்சம்பவம் புதன்கிழமை (05) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடி வீதி, பாலமுனை மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய ஜீவராசா திலக்ஸன் என்பவரே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு பிரதேசத்துக்கு வேலைக்குச்சென்று வீடு திரும்பிய நிலையில் சம்பவ தினத்தன்று தனது வீட்டில் உணவருந்திவிட்டு நண்பரொருவரின் மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு வெளியில் சென்றுள்ளார். பின்னர் வீடு திரும்பாத நிலையில் அன்று மாலை சுணையங்கல்லு பிரதேசத்தில் உள்ள வயல் பிரதேசத்தில் மரமொன்றில் தூக்கிட்ட நிலையில் குறித்த இளைஞன் காணப்பட்டதை வீதியால் சென்ற நபரொருவர் கண்டு பொலிஸாருக்கு தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு உறவினர்கள், பொலிஸார் சென்று பார்வையிட்டதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பணித்தார். சம்பவம் பற்றிய விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை புதுமுக இளைஞர்களை களமிறக்கத் தீர்மானம்

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலில் 35க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களை களமிறக்குவதுடன், அவர்களில் பலர் புதுமுகங்களாகவும் இளைஞர்களாகவும் உள்ளனர் எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (05) கொழும்பில் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே கூட்டணியின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி, நுவரெலியா, பதுளை, மாத்தளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் போட்டியிடவுள்ளன.

ஏறக்குறைய 35க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களைக் களமிறக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்த வேட்பாளர்களில் பலர் புதுமுகங்களாகவும் இளைஞர்களாகவும் உள்ளனர். அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கட்சியின் வேட்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் அவர்களை வழிநடத்தவுள்ளனர்.

இந்தத் தேர்தலில் பெரும்பாலான மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. தமிழ் முற்போக்கு கூட்டணியானது ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் இருக்கின்ற பிரதான பங்காளிக் கட்சி என்ற வகையில் அவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அந்த பேச்சுவார்த்தை சிறப்பாக நடைபெறும் பட்சத்தில் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடவுள்ளதுடன், ஏனைய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள்ளே இருக்கும் கட்சிகளின் சின்னத்திலும் போட்டியிடுவோம். ஏனென்றால் இந்த தேர்தல் முறைப்படி தனித்தனியாக பயணித்து ஒரே இடத்தில் கூடி சபையைக் கைப்பற்றுவதற்கு நாம் சிறப்பாக செயற்படுவோம். நிச்சயமாக உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியடைவோம்.

கடந்த தேர்தல்களில் சற்று மயக்கமடைந்த மக்கள் தற்போது சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அதன் வெளிப்பாடு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நிச்சயமாக வெளிப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது'' என்றார்.

# ஜனாதிபதியுடன் மின்சார சபை அதிகாரிகள் சந்திப்பு



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் மின்சார சபையின் அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (05) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

எரிசக்தி துறையில் நிலையான மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சியான எரிசக்தி விநியோகம் மற்றும் எரிசக்தி துறைக்கு அமைவாக தற்போதைய மற்றும் எதிர்பார்ப்பு நிலைமைகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இந்நிகழ்வில் எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டீ.எம்.உதயங்க ஹேமபால, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர் தன உள்ளிட்டவர்களுடன் மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய உள்ளிட்ட மின்சார சபையின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# கல்விக்கொள்கை மாற்றத்துக்காக 'கல்விச் சபை' அமைக்க தீர்மானம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



நாட்டின் கல்விக் கொள்கை மாற்றத்துக்காக 'கல்விச் சபை' ஒன்றை அமைப்பதற்குத் தயாராகியுள்ளதாக பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

மேலும், கல்வித்துறையில் தொழிற்றிறன் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் எனும் கல்விச் சபையை அமைக்கும் அடிப்படை நோக்கம் என்றும் 2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்பில் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய, சிறந்த இயலுமைமிக்க மற்றும் வளமானவர்களை உருவாக்குவது அவசியமாகும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

மீகொடவில் அமைந்துள்ள தேசிய கல்வியியல் கல்லூரியின் கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 2009ஆம் ஆண்டில் கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட அதிகாரிகளின் தரம் ஒன்று முதல் விசேட தரம் வரை பதவி உயர்வு வழங்கலுடன் சம்பந்தப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

# புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் புதிய செயலாளராக டபிள்யூ.பீ. சேனாதீர நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைவான கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் டபிள்யூ.பீ.சேனாதீரவுக்கு நேற்று முன்தினம் (05) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

# பயன்படுத்தப்படாத அம்பியூலன்ஸ்களை திருத்தி மீளப் பயன்படுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடல்





வைத்தியசாலைகளில் பயன்படுத்த முடியாமலுள்ள அம்பியூலன்ஸ்களை திருத்தியமைத்து மீளப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அதன் தலைவர் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் அண்மையில் (04) நடைபெற்றது.

நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இதற்கமைய தற்போது வைத்தியசாலைகளில் பயன்படுத்தாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அம்பியூலன்ஸ்களில் உள்ள குறைபாடுகளைச் சீர்செய்து அவற்றை நோயாளிகளின் பராமரிப்புச் சேவைக்குப் பயன்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அவ்வாறு குறைபாடுள்ள அம்பியூலன்ஸ்களை அரசாங்கத்துக்குச் செலவின்றி, தனியார்துறை மட்டத்தில் சீர்செய்து பயன்படுத்துவதற்குக் காணப்படும் சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்து கேள்வியெழுப்பினர். இது தொடர்பான நிலைமைகளை ஆராய்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க முடியும் என அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறியளவிலான பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய வாகனங்களுக்காக மாகாண மட்டத்தில் சுகாதார அமைச்சின் சிறிய பராமரிப்பு அலகுகளை அமைப்பது பொருத்தமானது எனத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் (வைத்தியர்) அனில் ஜாசிங்க, அதன்படி முதற்கட்டமாக மேல் மாகாணத்தில் அவ்வாறானதொரு அலகொன்றை அமைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச ஒசுசலவொன்றை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்குப் பொருத்தமான இடம் மற்றும் காணி அடையாளம் காணப்பட்ட பின்னர் ஒசுசலவை விரைவில் அமைக்க முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், கிழக்கு மாகாணத்தில் வைத்தியசாலைகளை நிர்மாணிப்பது குறித்தும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி, கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடையாத வைத்தியசாலைகளின் கட்டுமானத்தை முடிப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. பிராந்திய வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள், மருத்துவர்களின் பற்றாக்குறை மற்றும் மருத்துவர்களின் இடமாற்றங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வெகுசன ஊடக அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் குழுவில் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, ரஜரட்ட பிராந்திய வானொலி ஒலிபரப்பை தொடர்ந்தும் நடத்திச் செல்வதா என அதிகாரிகளிடம் உறுப்பினர்கள் வினவினர். தற்பொழுது ரஜரட்ட வானொலி பல சிரமங்களுக்கு மத்தியில் ஒலிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அதனை நிறுத்துவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், வானொலியை மீண்டும் உயர் மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். ரஜரட்ட சேவைக்கு தன்னார்வமாக வளங்களை வழங்குவதற்கு கலைஞர்கள் மற்றும் நிபுணர்கள் குழு தயாராக இருப்பதாகவும் அதற்குள் இணைவதற்கு ஒரு முறையான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றும் இங்கு கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

# பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிக்க பயணிகளை விழிப்புணர்வூட்டல்



பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறையை ஒழிப்பது குறித்து பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம்(05) பெஸ்டியன் சாலை தனியார் பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

மார்ச் 08ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர் விவகார அமைச்சு இந்த ஆண்டு மார்ச் 02முதல் மார்ச் 08வரை மகளிர் வாரத்தை அறிவித்துள்ளது. மேலும் பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலை ஒழிப்பதற்கான நாளாக மார்ச் 05ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காகத் தயாரிக்கப்பட்ட ஸ்டிக்கர்கள் பஸ்களில் அடையாளமாக ஒட்டப்பட்டன.

பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் குறித்து பொதுப் பயணிகள் விழிப்புணர்வுடன் இருக்கவும் அதற்கு எதிராகப் போராடவும் அவர்களைத் தூண்டும் வகையில், நாடு முழுவதும் உள்ள பஸ்களிலும் ரயில்களிலும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

அதன்படி, பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறித்து அறிவிப்பதற்கு 1938 - பெண்கள் உதவிச் சேவை, 109 - குழந்தைகள் மற்றும் பெண்கள் அவசர அழைப்பு, 119 - பொலிஸ் அவசர அழைப்பு, 1955 - தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, 1958 - இலங்கை போக்குவரத்துச் சபை, 1971 - இலங்கை ரயில் சேவைகள் திணைக்களம் ஆகிய அவசர அழைப்பு எண்களுக்கு பயணிகள் முறைப்பாடுகளை அளிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (06.03.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 182.9476 | 192.2277 |
| கனேடியன் டொலர் | 202.1517 | 210.6646 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3876 | 41.9563 |
| யூரோ | 312.9454 | 325.5678 |
| ஜப்பான் யென் | 1.9446 | 2.0209 |
| சிங்கப்பூர் டொலர் | 216.8289 | 226.7375 |
| ஸ்ரேலிங் பவுன் | 374.1825 | 388.1537 |
| சுவிஸ் பிராங் | 324.2323 | 339.0792 |
| ஐ.அ. டொலர் | 291.3211 | 299.8506 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.1543 |
| குவைட் | குவைட் தினார் | 956.5190 |
| ஓமான் | ஓமான் றியால் | 766.8600 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0013 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7132 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.3849 |

# வேலணை-வங்களாவடி பிரதேச வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்க

## யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினர் அனுசியா கோரிக்கை



(சாவகச்சேரி நிருபர்)

வேலணை-வங்களாவடி பிரதேச வைத்தியசாலையில் நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேலணைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினருமான திருமதி ஜெ.அனுசியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் அண்மையில், அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலோடு, இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தீவகப் பிரதேசத்தின் இரண்டாவது பிரதான வைத்தியசாலையாக மேற்படி வைத்தியசாலை காணப்படுகின்ற போதிலும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக வைத்திய சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றன.

கடந்த அரசாங்க காலத்தில் இந்த வைத்தியசாலை 'பி' தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ள போதிலும் அதற்கான ஆளணி வளங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எவையுமே இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இரண்டு வைத்தியர்களே இங்கு நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அங்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றனர். தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையும் நீண்டகாலமாக நிலவி வருகின்றது.

வருடம் ஒன்றுக்கு சுமார் 25,000க்கும் மேற்பட்ட வெளி நோயாளர்களும் 1500க்கும் மேற்பட்டோர் விடுதிகளில் தங்கியும் சிகிச்சைப் பெற்றுவரும் நிலையில், உடனடியாக உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

# சைவ மங்கையர் கழகத்தில் ரவிராஜ் நாஸ்ரேயின் சாயி பஜனை



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் நூறாவது அவதார தின ஆண்டை முன்னிட்டு கொழும்பு, ஸ்ரீ சத்யசாயி சமித்தியால் விசேட பஜனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், உலகப் புகழ்பெற்ற கஸல் பாடகரும் சாயி அடியவர்கள் அனைவரும் அறிந்த, சாயி பக்தராகிய ரவிராஜ் நாஸ்ரே கலந்துகொண்டு, பஜனைப் பாடல்களை பாடவுள்ளார்.

இந் நிகழ்வு, நாளை 08ஆம் திகதி சனிக்கிழமை, வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள, சைவ மங்கையர் கழகத்தில் நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விசேட பஜனை நிகழ்வு மாலை 07 மணிவரை நடைபெறும் என்றும் அனுமதி முற்றிலும் இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகளிர் தினத்தில் மகளிருக்கான சைக்கிள் சவாரி



சர்வதேச மகளிர் தினத்தை முழு உலகமே கொண்டாடுவதற்கு தயாராகி வரும் நிலையில் 'றைட் கலம்போ - 25' (Ride Colombo 25) என்ற பெயரில் மகளிருக்கான சைக்கிள் சவாரி தொண்டு நிகழ்ச்சி ஒன்றை ப்றீ லங்கா மற்றும் எக்ரொஸ் லங்கா ஆகிய நிறுவனங்கள் நாளை 08ஆம் திகதி நடத்தவுள்ளன.

பெண்களின் முன்னேற்றம், ஒற்றுமை மற்றும் உற்சாகம் நிறைந்த வாழ்க்கையை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்ச்சியாக இந்த சைக்கிள் சவாரி அமையவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இலங்கை சைக்கிளோட்ட வீராங்கனைகள், இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண் சைக்கிளோட்டிகள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

காலிமுகத்திடலில் ஆரம்பித்து பம்பலப்பிட்டிவரை சென்று மெரைன் ட்ரைவ் வழியாக மீண்டும் ஆரம்பித்த இடத்தில் நிறைவுபெறும் இந்த 10 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சைக்கிள் சவாரி ஒரு போட்டி நிகழ்ச்சியல்ல எனவும் பெண்களை தைரியப்படுத்தி பல்வேறு வகைகளில் அவர்களை ஊக்கப்படுத்தும் ஒரு தொண்டு நிகழ்ச்சி எனவும் ப்றீ லங்கா நிறுவனத்தின் ஸ்தாபகர் மதுர தர்மரத்ன தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சி தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (05) மாலை நடைபெற்றது.

றைட் கலம்போ - 25 நிகழ்ச்சியை மதுர தர்மரத்ன, எக்ரொஸ் சிலோன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாரா இவேஞ்சலி, WCIC அதிபர் கயனி டி அல்விஸ், பின்க் வீல்ஸ் குழுத் தலைவி தர்ஷி ஆரியரட்ன, கொம்யூனிட்டி சேர்விஸ் இணை பணிப்பாளர் செனானி ஹேரத், கொழும்பு பல்கலைக்கழக லியோ கழகத் தலைவர் பாத்திஷ காவிந்த ஆகியோர் இணைந்து நடத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு அன்லின் பிரதான அனுசரணையையும் சினமன் கிராண்ட் ஹோட்டல் உப அனுசரணையையும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## JASTECA விருதுகள் - 2025 ஐ அறிவித்துள்ள ஜப்பான் - இலங்கை தொழில்நுட்ப - கலாசார சங்கம்



**5S, கைசென், மற்றும் CSR நிலைத்தன்மையில் சிறந்து விளங்குவோரை கௌரவிக்கும் விருதுகள்.**

ஜப்பான் - இலங்கை தொழில் நுட்ப மற்றும் கலாசார சங்கம் (JASTECA) 5S, Kaizen மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) நடைமுறைகளில் இலங்கையின் சிறந்த செயற்றிறன் கொண்ட நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் கௌரவமான JASTECA விருதுகள்-2025 ஐ அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது.

அதன் தொடக்கத்திலிருந்தே JASTECA ஆனது பணியிடச் சிறப்பு செயற்பாட்டுத் திறன் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதில் முன்னோடியாக இருந்து வருகிறது. இந்த ஆண்டு நிகழ்வு ஜப்பானிய மேலாண்மை தத்துவங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்து புதுமை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வணிகங்களை அங்கீகரிப்பதில் மற்றொரு அத்தியாயத்தைத் தொடங்குகிறது.

JASTECA இன் தலைவர் மங்கள சமரஜீவ தனது எண்ணங்களை வெளிப்படுத்திய போது> JASTECA விருது என்பது ஒரு பாராட்டுக்கு மேலானது - இது ஒரு சிறப்பு அடையாளம். இது நிறுவனங்களுக்கு தொழில் துறையில் அங்கீகாரத்தை மேம்படுத்துதல், பங்குதாரர்களின் நம்பிக்கையை அதிகரித்தல் மற்றும் சந்தையில் போட்டி நன்மையைப் பெறுதல் போன்றவற்றை வழங்குகிறது. பங்கேற்பாளர்கள் மதிப்பீட்டு வாய்ப்புகள் மற்றும் பணியாளர் ஈடுபாடு ஆகியவற்றிலிருந்தும் பயனடைவார்கள். இந்த அங்கீகாரம் தற்போதைய வெற்றியை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், எதிர்கால வளர்ச்சிக்கான ஒரு தூண்டுதலாகவும் செயற்படுகிறது என்று கூறினார்.

JASTECA விருதுகள் -2025க்கான விண்ணப்பங்கள் இப்போது திறக்கப்பட்டு அதிகாரபூர்வ JASTECA இணையதளம் வழியாகச் சமர்ப்பிக்கலாம்: https://jasteca.org/. சமர்ப்பிப்புகளுக்கான கடைசி திகதி மார்ச் 25, 2025 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடுமையான தேர்வுச் செயற்பாட்டில் பூர்வாங்க மதிப்பீடுகள், குறுகிய பட்டியல் மற்றும் தொழில் வல்லுநர்களால் நடத்தப்படும் இறுதி மதிப்பீடுகள் இதில் உள்ளடங்கியிருப்பது விசேட அம்சமாகும்.



**இலங்கையின் #1 இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் துணை நிறுவனமான Digital Health (Pvt) Ltd (Doc990) மற்றும் Allianz Insurance Lanka Ltd ஆகியவை இணைந்து உள்ளூர் மருத்துவக் கொள்கைகளைக் கொண்ட Allianz வாடிக்கையாளர்களுக்கு மருத்துவ சேவை அணுகலை மேம்படுத்தும் ஒரு புதுமையான ஒத்துழைப்பை அறிமுகப்படுத்தியுள்ளன. நிகழ்வில் Digital Health (Pvt) Ltd குழு - கசுன் ஹசிதா (மேலாளர் - மேம்பாடு மற்றும் புதுமை), தீக்ஷனா ஏக்கநாயக்க (மேலாளர் - வணிக மேம்பாடு) ,ஜனித் பீரிஸ் (தலைமை நிர்வாக அதிகாரி), Allianz Insurance Lanka Limited குழு - பிரசாந்த் குரோவர் (தலைமை நிர்வாக அதிகாரி), ரங்க தியாஸ் (தலைமை விநியோக அதிகாரி), திமிர மனமேந்திர (துணை பொது மேலாளர் - தேசிய வங்கிக் காப்பீடு) மற்றும் கசுன் யடவர (சந்தை மேலாண்மை தலைவர்) ஆகியோரைப் படத்தில் காணலாம்.**

## பிரத்தியேக ‘Anthem of the Seas’ உல்லாசப் பயண அனுபவத்தின் வெற்றியாளரை அறிவித்த HNB




இலங்கையின் முன்னணி வாடிக்கையாளர் வங்கியான HNB PLC, தனது பிரமாண்டமான பண்டிகைக்கால மேம்பாட்டு நடவடிக்கையின் வெற்றியாளராக இசுரு அமரசேகரவை அறிவித்துள்ளது. இவருக்கு ‘Anthem of the Seas’ என்ற ஆடம்பர கப்பலில் இவருக்கான முழுமையான கடல் பயண அனுபவத்தையும் பரிசாக வழங்கியது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 05 முதல் டிசம்பர் 31 வரை நடைபெற்ற இந்த மேம்பாட்டு நடவடிக்கை, HNB கடன் அட்டைதாரர்களின் பண்டிகைக்கால செலவினங்களுக்கு வெகுமதி அளித்தது. செலவு செய்த ஒவ்வொரு 10,000 இலங்கை ரூபாவுக்கும் ஒரு லொட்டரி டிக்கெட் வழங்கப்பட்டது. தகுதிபெற குறைந்தபட்சம் மொத்தம் 1,00,000 இலங்கை ரூபா செலவிட வேண்டும். வங்கி அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் முன்னிலையில் வெளிப்படையான லொட்டரி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி வெற்றியாளர். இப்போது அற்புதமான உணவு, அற்புதமான பொழுதுபோக்கு மற்றும் அற்புதமான காட்சிகளைக் கொண்ட உலகத்தரமான கடல் பயணத்தை மேற்கொள்வார்.

## வெள்ளி விருதை வென்ற “NDB Talking Calendar”




NDB வங்கியானது Effie விருதுகள் 2024 இல் தனது வெற்றியை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. அதன் அற்புதமான ஊடாடும் செயற்கை நுண்ணறிவு [AI] நாட்காட்டிக்காக வர்த்தகநாம அனுபவப் பிரிவில் கௌரவமிக்க வெள்ளி விருதைப் பெற்றுள்ளது. இந்த அங்கீகாரமானது வாடிக்கையாளர் அனுபவத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் வங்கி அனுபவங்களின் எதிர்காலத்தை மறுவரையறை செய்வதற்குமான வங்கியின் புதுமையான அணுகுமுறையின் பிரதிபலிப்பாகும்.

2024 க்கான ஊடாடும் நாட்காட்டியானது, வாடிக்கையாளர் பயணத்தை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பம் மற்றும் வங்கிச் சேவையை இணைப்பதில் NDB இன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக உள்ளது. முன்னோக்கிச் சிந்திக்கும் பார்வையுடன் வடிவமைக்கப்பட்ட இந்த நாட்காட்டியானது, தொழில்நுட்பம் மற்றும் வசதியின் ஒருங்கிணைப்பை உள்ளடக்கி, பாரம்பரிய வடிவங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அதிவேக அனுபவத்தைப் பயனாளிகளுக்கு வழங்குகிறது.

## இலங்கையின் முதல் அதிவிசேட முகப்பரு ஆய்வு நிலையத்தை அறிமுகப்படுத்திய Christell Luxury Wellness



christell acne lab

தன்னம்பிக்கையுடன் பிரகாசிக்க தனியுரிம 5அம்ச படிமுறைகளுடன் முகப்பரு பராமரிப்பில் புரட்சியை ஏற்படுத்தியுள்ள Christell Luxury Wellness நிறுவனமானது பெருமையுடன் அதன் அதிநவீன Christell முகப்பரு ஆய்வு கூடத்தை [Christell Acne Lab] அண்மையில் திறந்து வைத்தது. இது அதி நவீன வகையிலான முகப்பரு சிகிச்சைக்காக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது உயர் அதிவிசேட சிகிச்சை நிலையமாகும். Christellலின் தனித்துவமான மற்றும் தனியுரிமமான இந்த முகப்பரு ஆய்வு சிகிச்சை நிலையத்தின் மையப்பகுதியில் முகப்பரு பராமரிப்புக்கான தனிப்பயனாக்கப்பட்ட, முழுமையான அணுகுமுறையை வழங்கும் அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்ட முகமானது மாசுமருவற்று நம்பிக்கையுடன் ஒளிர்வதற்கான 5 சிறப்பு அம்சங்களைக் கொண்ட வழிமுறைகளை நாம் அவதானிக்கலாம்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலான சருமப் பராமரிப்பு புத்தாக்க அனுபவத்துடன், Christell முகப்பரு ஆய்வு கூடமானது தெளிவான சருமத்தை மட்டுமல்லாது அனைத்து வயது மற்றும் சருமவகை நோயாளிகளுக்கும் நம்பிக்கையின் புதுப்பிக்கப்பட்ட உணர்வை உறுதியளிக்கிறது.

Christell Luxury Wellness என்பது இலங்கையில் மருத்துவ சரும பராமரிப்பு மற்றும் ஆரோக்கியத்தில் முன்னணி நாமமாகத் திகழ்கிறது. இது அறிவியலை ஆடம்பரத்துடன் கலக்கும் புதுமையான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்குகிறது. உலகத் தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் அர்ப்பணிப்பு நிபுணத்துவத்துக்காக அறியப்பட்ட Christell, சருமப் பராமரிப்பு மற்றும் அழகின் எதிர்காலத்தை மறுவரையறை செய்து வருகிறது.

மேலதிக தகவல்களுக்கு, www.christellskin.com ஐப் பார்வையிடவும்.

## TRI-ZEN by John Keells Properties குடியிருப்பு நிர்மாணச் செயற்றிட்ட நிறைவுக் கொண்டாட்டம்

கொழும்பின் மையப்பகுதியில் அமைந்துள்ள மிகப் பாரிய குடியிருப்பு நிர்மாணச் செயற்றிட்டமான TRI-ZEN வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதைக் குறிக்கும் வகையில், John Keells Properties மற்றும் Indra Traders ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து 2025 பெப்ரவரி 28 அன்று நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தன. 897 அடுக்குமனைகளுடன் கொழும்பு - 02, யூனியன் பிளேஸில் அமைந்துள்ள TRI-ZEN செயற்றிட்ட வளாகமானது, தொழில்நுட்ப வசதிகளுக்கான அணுகல் மற்றும் சமகால வடிவமைப்பு ஆகியவற்றின் சங்கமத்துடன், நகர வாழ்வுக்கு மீள்வரைவிலக்கணம் வகுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இந்தப் பாரிய முயற்சி நிறைவுபெற்றுள்ளதைக் கொண்டாடும் வகையில் இச்செயற்றிட்டத்துடன் தொடர்புட்ட தரப்பினர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடும் நிகழ்வாக இது இடம்பெற்றது.








**Mark and Comm Ltd முகாமைத்துவப் பணிப்பாளர் தன்சில் தாஜுதீன் இலங்கையின் ஊடகத் துறையை வலுப்படுத்துவதற்காக இலங்கையில் ஊடகத்துறையின் நிலை தொடர்பான பரந்த அறிக்கையை ஊடக அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸவிடம் சமர்ப்பித்தார்.**

## சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு



சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் Dr. Agnes Callamard, அதன் ஆய்வாளரான தியாகி ருவன்பத்திரன, ஸ்மிருதி சிங் (Regional director), பாபுராம் பாண்டி (Deputy Regional Director (campaign), Isabelle Lassee (Deputy Regional Director (campaign) ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். ஏறக்குறைய ஒரு மணி நேரம் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.









**இறக்குவானை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான முத்தேர் பவனியும் பிரம்மோற்சவப் பெருவிழாவும் நடைபெற்றன. இதற்கிணங்க கடந்த 04ஆம் திகதி காலை கணபதி வழிபாடுகளோடு கொடியேற்ற நிகழ்வு இடம்பெற்று தொடர்ந்து 08ஆம் திகதி கற்பூரச்சட்டி, 10ஆம் திகதி வேட்டைத் திருவிழா, 11ஆம் திகதி சப்பறத் திருவிழா, 12ஆம் திகதி தேர்த் திருவிழா, 13ஆம் திகதி தீர்த்த உற்சவம், 15ஆம் திகதி வைரவர் மடை நடைபெற்று உற்சவம் நிறைவுபெறவுள்ளது.**


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# அதிகாரத்தில் நீடிக்க வர்த்தகப் போரை பயன்படுத்துகிறார் ‘ஆளுநர்’ ட்ரூடோ

## அமெரிக்க ஜனாதிபதி அதிரடி

அதிகாரத்தில் நீடிப்பதற்காக வர்த்தகப் போரை பயன்படுத்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நினைப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அவரை ‘ஆளுநர்’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவுக்குப் பதிலடி தரும் வகையில் வரி விதிப்பதிலிருந்து பின்வாங்கப்போவதில்லை என கனடா பிரதமர் ட்ரூடோ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். கனடா பொருட்கள் மீது அமெரிக்கா வரி விதிப்பதை கைவிடாவிட்டால் நாங்களும் வரி விதிப்பை கைவிட மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்ற ட்ரம்ப் பல்வேறு அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார். இந்நிலையில், பிற நாடுகள் இறக்குமதிசெய்யும் பொருட்களுக்கு அவர்கள் விதிக்கும் இணையான வரி விதிக்கப்படுமென்று அறிவித்தார். அந்த வகையில், கனடாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக கனடா இணைக்கப்படுமென்று தொடர்ந்தும் ட்ரம்ப் தெரிவித்து வருகிறார். இந்நிலையில், அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்கப் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார்.

இந்நிலையில், கனடா பிரதமர் ஜஸ்டின் தன்னை தொடர்புகொண்டு பேசியதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அவர்களின் உரையாடல் குறித்து ட்ரம்ப் தெரிவித்ததாவது:

“கனடாவைச் சேர்ந்த ஜஸ்டின் என்னை தொடர்புகொண்டு வரி உயர்வு குறித்து தொலைபேசியில் உரையாடினார். கனடா மற்றும் மெக்சிகோ எல்லை வழியாக அமெரிக்காவுக்குள் வந்த போதைப்பொருட்களால் பலர் உயிரிழந்ததை அவரிடம் சொன்னேன். தற்போது போதைப் பொருள் ஊடுருவல் நிறுத்தப்பட்டதாக அவர் கூறியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பிரதமர் தேர்தல் எப்போது நடைபெறவுள்ளது என்பதை அவரால் என்னிடம் கூற முடியவில்லை. கனடாவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்ற ஆர்வத்தை எனக்குள் தூண்டியது. அதன்பின்னர்தான் வர்த்தகப் போரை பதவியில் நீடிக்க பயன்படுத்த விரும்புகிறார் என்பதை உணர்ந்தேன்” - எனப் பதிவிட்டிருந்தார்.

மற்றொரு பதிவில், ‘‘கனடா ஆளுநர் ஜஸ்டின்’ எனக் குறிப்பிட்டு, அவரது பலவீனமான எல்லைக் கொள்கையால் அமெரிக்காவுக்குள் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதமாக மக்கள் ஊடுருவல்தான் பெரும்பாலான பிரச்சினைக்குக் காரணமென்று கூறினேன்” - எனத் தெரிவித்துள்ளார். கனடா பிரதமரை தொடர்ந்து ஆளுநர் என்று ட்ரம்ப் அழைத்து வருவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



# கிரீன்லாந்தை அடைந்தே தீருவோம்!

## ட்ரம்ப் சூளுரை




‘‘டென்மார்க்கின் தன்னாட்சிப் பிரதேசமான கிரீன்லாந்து தீவை ஏதாவதொரு வகையில் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்’’- என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சூளுரைத்துள்ளார்.

தனது முந்தைய ஆட்சியின்போது (கடந்த 2019), கிரீன்லாந்தை விலைக்கு வாங்கப்போவதாக அறிவித்த ட்ரம்ப்பின் யோசனையை டென்மார்க் அரசு நிராகரித்துவிட்டது. இதனைத் தொடர்ந்து, அவர் டென்மார்க் பயணத்தை இரத்துச்செய்தார். தற்போது மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள நிலையில், டென்மார்க்கை வாங்கும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் மத்தியில் ட்ரம்ப் இது தொடர்பாக பேசியதாவது,

‘‘கிரீன்லாந்தை ஏதாவதொரு வழியில் அமெரிக்கா கைப்பற்றும். கிரீன்லாந்தில் தற்போது வசிப்பவர்களை தங்கள் மக்களாக ஏற்றுக்கொள்ள அமெரிக்கா தயாராகவுள்ளது’’ - என்றார்.

டென்மார்க்குக்குச் சொந்தமான கிரீன்லாந்துக்கு கடந்த 1979ஆம் ஆண்டு சுயாட்சி வழங்கப்பட்டது. உலகிலேயே மிகப்பெரிய தீவான இதன் 80 சதவீத நிலப்பரப்பு பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளது. அட்லாண்டிக் மற்றும் ஆர்டிக் பெருங்கடல்களுக்கிடையே அந்தத் தீவு அமைந்துள்ளதால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட உலக சக்திவாய்ந்த நாடுகளுக்கு இத்தீவு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவுள்ளது.



# எவ்.பி.ஐ. - நீதித்துறை உட்பட 440 அரச கட்டடங்களை விற்க முடிவு

## பட்டியல் போட்டு பரபரப்பை ஏற்படுத்துகிறது ட்ரம்ப் நிர்வாகம்



அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் மீண்டும் பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசு நிர்வாகத்தின் செலவைக் குறைக்க பல தடாலடி முடிவுகளை எடுத்து வருகிறார். அந்த வரிசையில் தற்போது 440 அரச கட்டடங்களை விற்க அவர் முடிவெடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக விற்கப்படும் கட்டடங்கள் பட்டியலை பொதுச் சேவைகள் நிர்வாகம் தற்போது வெளியிட்டுள் ளது. அதில், அமெரிக்காவின் அடையாளமாகக் கருதப்படும் பல அரச கட்டடங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, நாட்டின் முக்கிய புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐயின் தலைமையகமான ஜே.எட்கர் ஹூவெர் கட்டடம் இடம்பெற்றுள்ளது. நீதித்துறை கட்டடமான ரொபர்ட் எவ் கென்னடி கட்டடம், பழைய தபால் அலுவலகம் ஆகியவை பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இங்கெல்லாம் அரச பணிகள் பிரதானமாக நடைபெறவில்லை என்பது ட்ரம்ப் நிர்வாகம் கூறும் காரணம். அதனால், அவசியமில்லாத இந்தக் கட்டடங்களை விற்கவும் மூடவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பல கோடி அரசு பணம் மிச்சமாகுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கட்டட இடிபாடுகளுக்கிடையே காஸாவில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு.....





# பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் ஹமாஸுக்கு முடிவு கட்டப்படும்

## ட்ரம்ப் எச்சரிக்கை

பணயக் கைதிகளை விரைவில் விடுவிக்காவிட்டால் ஹமாஸுக்கு முடிவு கட்டப்படுமென அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் 15 மாதங்களாக நீடித்த நிலையில், தற்போது தற்காலிய போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு, இரு தரப்பினரிடையேயும் பணயக் கைதி பரிமாற்றம் இடம்பெற்று வருகின்றன.

இதற்கிடையே, பணயக் கைதிகளில் சிலர் மட்டுமே திரும்ப அனுப்பப்பட்டுள்ள நிலையில், மற்றவர்களை அனுப்புவதை ஹமாஸ் நிறுத்திவைத்துள்ளது.

இது தொடர்பில் சமூக வலைத்தளத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில், ஹமாஸ் அமைப்பினர் தங்களது பிடியில் உயிருடனுள்ள பணயக் கைதிகள் அனைவரையும் விடுவித்து கொல்லப்பட்டவர்களின் உடல்களையும் ஒப்படைக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளதுடன், இந்த விவகாரத்துக்கு முடிவு கட்டத் தேவையான அனைத்து உதவிகளையும் இஸ்ரேலுக்கு செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் ஹமாஸ் அமைப்பின் ஓர் உறுப்பினர் கூட உயிருடன் இருக்க முடியாது. பணயக் கைதிகளை விடுவித்து காஸாவை விட்டு வெளியேறாவிட்டால் ஹமாஸ் அமைப்புக்கு முடிவு கட்டப்படுமென ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



## தம்புள்ளை கூட்டுறவுச் சங்கத்தில்

# ஊழல் மோசடி;விசாரணை ஆரம்பம்

(எம்.எஸ்.எம்.மசாஹிம்)

தம்புள்ளை கூட்டுறவுச் சங்கத்தில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலின்படி மத்திய மாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, தம்புள்ளை கூட்டுறவுச் சங்கத்தில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக மத்திய மாகாண கூட்டுறவுத் திணைக்களத்துக்கு பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்தே குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தம்புள்ளை கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் கிராமிய வங்கியின் கடன் வழங்கும் பகுதி, பொதுமக்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார நிதியுதவி, கிராமிய வங்கியின் அபிவிருத்திப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீட்டில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள், கிராமிய வங்கியின் நிர்மாணப் பணிகளின்போது இடம்பெற்றுள்ள 12 மோசடிகள் சம்பந்தமாகவும் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி விசாரணைகள் 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்குட்பட்ட கால எல்லைக்குள் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் பற்றியே மேற்கொள்ளபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான தகவல்கள் தெரிந்தோர் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மத்திய மாகாண கூட்டுறவுத் திணைக்களத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.



கண்டி மாவட்ட சாரணர் இயக்க அங்கத்தவர்கள் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் சாரணர் பேடன் பவுலின் 168ஆவது வருட நினைவாக நேற்றைய தினம் (06) சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். கண்டி ரயில் நிலைய சுற்று வட்டாரத்தில் இவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ஜே.எம்.ஹாபீஸ்)

# சிவனொளிபாதமலை

## யாத்திரிகர்களால் சூழல் மாசடைவு



(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் ஊசிமலை பகுதியில் விட்டுச் செல்லும் பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் உக்காத பொருட்களால் அப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாத்திரிகர்கள் ஊசிமலை பகுதியில் தங்களது நேர்த்திக் கடன்களை முடித்துவிட்டு அப்பகுதியில் பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் உக்காத பொருட்கள் என்பவற்றை அப்பகுதியிலுள்ள வனப் பகுதியிலும் எறிந்துவிட்டுச் செல்வதால் சிவனொளிபாதமலை வனப் பகுதியில் பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூர் துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(ஜே.எம்.ஹாபீஸ், ராமு தனராஜா)

மஹியங்கனைப் பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றுடன் இருவர் நேற்று முன்தினம் (05) மஹியங்கனை பொலிஸாரால் கைசெய்துசெய்யப்பட்டுள்ளனர்.

கொலணியைச் சேர்ந்த ஒருவரும் பதியதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மஹியங்கனையில் மேற்கொண்ட தேடுதலின் போதே சந்தேக நபரொருவரின் வீட்டுக்கருகில் இத்துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது குறித்த துப்பாக்கியை பதியதலாவ பகுதியைச் சேர்ந்த நபரொருவர் தயாரித்தமை தெரியவந்துள்ளது. அதற்கமைய துப்பாக்கியை தயாரித்தவர் எனக் கருதப்படும் மற்றுமொரு சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் மஹியங்கனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அனுமதிப்பத்திரமின்றி மாட்டிறைச்சியை கடத்திய இருவர் கைது

(ராமு தனராஜா )

அனுமதிப்பத்திரமின்றி மாட்டிறைச்சியை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்ற இரு சந்தேக நபர்களை பசறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (05) காலை 10.00 மணியளவில் பசறை நகர் பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 31 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறையிலிருந்து பதுளைக்கு முச்சக்கரவண்டியில் மாட்டிறைச்சி கொண்டுசெல்லப்படுவதாக பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியரத்ன ஏக்கநாயக்கவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய முச்சக்கரவண்டியைத் தேடி பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் பொலிஸ் குழுவினரும் பதுளை நோக்கிப் பயணித்தபோது, சந்தேகத்துக்கிடமான முச்சக்கரவண்டியை பதுளை பசறை வீதி 10ஆம் கட்டை பகுதியில் இடைநிறுத்தி சோதனையிட்டபோது அதில் 89 கிலோ மாட்டிறைச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் திருடப்பட்ட மாடுகள் நீண்டகாலமாக விற்பனைக்காக அறுக்கப்பட்டு வருவது தெரியவந்துள்ளதாகவும், இது தொடர்பான வழக்குகள் பிபில மற்றும் மொனராகலை நீதிமன்றங்களில் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்ல மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த ஆகியோரின் பணிப்புரையின் பேரில் பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பசறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சீன பிரஜையால் தவறவிடப்பட்ட கெமராவை ஒப்படைக்க நடவடிக்கை



(எம்.ஏ.அமீனுல்லா)

சீன பெண்மணியொருவர் ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் தவறவிட்டுச்சென்ற 4,00,000 ரூபா பெறுமதியான கமெராவை திரும்ப அவரிடம் ஒப்படைப்பதற்காக தலதா மாளிகை பாதுகாப்பு பொலிஸ் மற்றும் கண்டி சுற்றுலா பொலிஸார் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தலதா மாளிகை வளாகத்தில் உரிமைகோராத நிலையில் கெமரா இருப்பதை அவதானித்த பக்தர் ஒருவர் அதனை தலதா மாளிகை பாதுகாப்புப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இது வெளிநாட்டுப் பிரஜைக்குச் சொந்தமானதென உறுதிப்படுத்தியதையடுத்து, ஸ்ரீ தலதா மாளிகை பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக கண்டி சுற்றுலாப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

குறித்த கெமரா தொடர்பில் விசாரணை செய்து உரியவரிடம் ஒப்படைக்கும் பணியில் பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் சுமார் இரண்டுவாரகாலம் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கெமராவை உரியவரிடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



காவத்தை நவோதய முன்பள்ளி பாடசாலையின் மாணவ மாணவிகளின் சிறுவர் சந்தை நேற்று முன்தினம் (05) குறித்த பாடசாலையின் நிர்வாகத் தலைவர் எஸ்.அருள்ராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் காவத்தைக் கிளை முகாமையாளர்,பெற்றோர்கள், நலன் விரும்பிகள், காவத்தை நவோதய முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(இரத்தினபுரி நிருபர்)

# தீர்க்கமான முடிவுக்கு நாம் தயார்!

## சிவஞானத்துக்கு கடிதம் மூலம் அறிவித்தார் செல்வம் எம்.பி.

(பு.கஜிந்தன்)



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமான சீ.வி.கே.சிவஞானத்தின் கடிதம் கிடைக்கப்பெற்ற நிலையில், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதில் கடிதமொன்றை சீ.வி.கே.சிவஞானத்துக்கு அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் இணைந்து செயலாற்றுவது சம்பந்தமாக தங்களுடைய விருப்பத்தை அதில் வெளிப்படுத்தியிருந்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ஒன்றான எமது கட்சி பல்வேறுவிதமான சவால்கள், விமர்சனங்கள், இடையூறுகள் எல்லாவற்றையும் தாண்டி எமது மக்களின் இன நலன் சார்ந்து ஒற்றுமையாகவும் பலமாகவும் அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டுமென்பதில் பல விட்டுக்கொடுப்புகளோடும் சகிப்புத்தன்மையோடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தொடர்ந்தும் பயணித்து வருகிறது.

2023இல் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக தங்களுடைய மத்திய குழு, வவுனியாவிலும் பின்னர் இறுதியாக மட்டக்களப்பிலும் எடுத்த ஏகோபித்த முடிவுக்கமைய தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

எமது கட்சியும் புளொட் அமைப்பும் அந்த நேரத்தில் தேர்தல் நலன்கள், வெற்றி தோல்விகள், அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்ளல் என்பவற்றைத் தாண்டி இன நலன் சார்ந்து ஒருமித்து பயணிக்கவேண்டிய கட்டாயத்தை தங்கள் கட்சித் தலைமையிடம் வலியுறுத்தியபோதும் தங்களது கட்சி மத்தியகுழுவின் முடிவே இறுதியானதென உறுதியாகத் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை அறிவித்தீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நலிவடையவிடாமல் தொடர்ந்தும் பாதுகாப்பதன் நோக்கத்தோடு தமிழ்த் தேசிய பரப்பிலிருந்த கட்சிகளோடு ஒன்றிணைந்து கூட்டணியாக நாம் பயணித்துக்கொண்டிருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முகங்கொடுத்திருக்கும் நமது இனம் தேர்தல் நலன்களை மாத்திரம் முக்கியத்துவப்படுத்தும் இந்தப் பிரிவின் மூலம் எதிர்காலத்தில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுமென்பதை தீர்க்கமாக நாம் எதிர்வுகூறியிருந்தோம்.

இன்று அந்த நிலைக்கு எங்களுடைய இனம் தள்ளப்பட்டிருப்பதை நன்குணர்ந்து, இணைந்து செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி தாங்கள் முன்வைத்துள்ள அழைப்பை நாங்கள் வரவேற்கிறோம். இன நலத்துக்காக விட்டுக்கொடுப்போடு பயணிப்பதற்கு நாம் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

விடுதலைப் போராட்டக் காலத்திலிருந்தே அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்பது எமது இனத்துக்கு நலன் பயக்கும் என்ற கொள்கையோடு ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் ஆகியவற்றுடன் விடுதலைப் புலிகளையும் இணைத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்.) என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்கள் நாங்கள்.

மேலும் கடந்த 2024இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் நாம் மக்கள் நலன்சார்ந்து ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்போடு வெற்றி தோல்விகளைக் கருத்திற்கொள்ளாது பயணித்தமையையும் அம்பாறை மாவட்டத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாடு தங்கள் கட்சியின் நிலைப்பாட்டால் தொடரமுடியாமல் போன துரதிர்ஷ்டமான சூழலையும் கவலையுடன் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தங்கள் அழைப்பை ஏற்று எமது கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளோடும் கலந்தாலோசித்து ஒன்றிணைந்து பயணிப்பது சம்பந்தமான தீர்க்கமான ஒரு முடிவை நாம் எட்டத் தயாராகவுள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

# சுடலையில் இருளில் தங்கும் பொலிஸார்; மின் வசதிகள் இல்லை!



(யாழ். நிருபர்)

மனித எச்சங்கள் மீட்கப்பட்ட நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட அரியாலை சித்துபாத்தி மயானத்தில் கடமைக்காக நிறுத்தப்பட்ட பொலிஸார் மின்னொளி வசதிகளின்றி இருளில் தங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் .

இவ்விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

சித்துபாத்தி மயானத்தில் தகன மேடை அமைப்பதற்காகத் அண்மையில் குழிதோண்டப்பட்டபோது மனித எச்சங்கள் வெளிவந்த நிலையில், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் குறித்த பகுதிக்குப் பொலிஸ் பாதுகாப்பை வழங்கிய நிலையில் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதியும் அப்பகுதியைப் பார்வையிட்டுச் சென்றார்.

இப்பகுதியின் பாதுகாப்புக்காக இரு பொலிஸார் 24 மணித்தியாலங்களும் பாதுகாப்புக் கடமையிலுள்ள நிலையில் இரவு நேரங்களில் மின்விளக்குகளின்றி இருளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மயானத்தில் உணவு உண்பதிலிருந்து தமது அன்றாட செயற்பாடுகளை இரவு நேரங்களில் மேற்கொள்வதற்கு மின்விளக்கின்மையால் பல்வேறு அசௌகரியகங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அது தொடர்பில் தாம் அவதானம் செலுத்துவதாகத் தெரிவித்தார்.

# பனைசார் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுக்கும்

## பேராசிரியர் பகீரதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)


''பனைசார் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பனை அபிவிருத்திச் சபையின் புதிய பணிப்பாளர் சபை என்றும் அயராது உழைக்கும்'' - என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடப் பீடாதிபதியும் வியாபார இணைப்பு அலகின் பணிப்பாளருமான பேராசிரியர் கந்தையா பகீரதன் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆறு பேர் அடங்கிய புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களுள் ஒருவராக பேராசிரியர் பகீரதன் நியமிக்கப்பட்ட நிலையிலேயே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

பனை அபிவிருத்திச் சபையை அரசாங்கத்துக்கு வருமானம் ஈட்டிக்கொடுக்கின்ற நிறுவனமாக மாற்றவும் - சபைக்கு கீழே இயங்கும் இதர நிறுவனங்களின் வியாபாரத்தை அதிகரிக்கவும் - பனை அபிவிருத்திச் சபையை மேலும் ஒருபடி மேலே கொண்டுசெல்லவும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவர் என்ற வகையில் எனது ஒத்துழைப்பை வழங்குவேன்.

பனைசார் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குகின்றனர்.



புதிய பணிப்பாளர் சபை பனைசார் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் வழிகாட்டுதல்களை வழங்கி அவர்களை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்லும்.

பனை அபிவிருத்திச் சபையின் கீழே உள்ள வடிசாலைகளை மீள இயங்கவைத்து தொழிலாளர்களின் தொழிலைப் பாதுகாப்போம்.

பனை அபிவிருத்திச் சபையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க அதன் தலைவருக்கு உறுதுணையாக இருந்து சபையின் கீழ் பணிபுரியும் ஊழியர்களை வினைத்திறனான பணியாளர்களாக மாற்றுவதற்கும் என்னால் முடிந்தவரையான ஆலோசனைகளை வழங்குவேன்.

அத்துடன், துறைசார் நிபுணர் என்ற வகையில் பனை அபிவிருத்திச் சபைக்கு வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து பனைசார் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதில் எனது பங்களிப்பு காணப்படும்.

துறைசார் நிபுணராக என்னை அடையாளம் கண்டு பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைக்கு நியமித்த பெருந்தோட்ட அமைச்சருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சரவை அமைச்சரான சந்திரசேகர் தொழிலாளர்களின் நலன்சார்ந்து எடுக்கின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு எனது பங்களிப்பு இருக்கும் - எனவும் சுட்டிக்காட்டினார்.

# தமிழ் அறிஞர் முத்தையா எழுதிய 'தமிழ் அறிவு' நூல் மாணவர்களுக்கு வழங்கிவைப்பு

(நெல்லியடி நிருபர்)

தமிழ் அறிஞர் கே.பி.முத்தையா எழுதிய 'தமிழ் அறிவு' என்ற தமிழ் இலக்கண நூல் வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை ஸ்ரீராமச்சந்திரனின் ஒருங்கிணைப்பில் மாணவர்களுக்கு இந்த நூல் வழங்கும் நிகழ்வு கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை சிலோன் சேச் தமிழ்க் கலவன் வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம், அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, மணல்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் நடைபெற்றது.





இப்பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தைக் கற்கும் 135 மாணவர்களுக்கு இந்நூல் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் செயலாளர் இரா.துரைரத்தினம், ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும் முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளருமான அ.சா.அரியகுமார், மூத்த ஊடகவியலாளர் எஸ்.தில்லைநாதன், பாடசாலை அதிபர்களான தவகோபால் யோகலிங்கம், கந்தசாமி சிவநேசன், நடராசா தேவராசா, குமாரவேல் கண்ணதாசன், கணேசமூர்த்தி உதயசீலன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சம்பியன்ஸ் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியா – நியூசிலாந்து மோதல்

**(அகீல் சிஹாப்)**

ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் மோத தகுதிபெற்றுள்ளன. அதன் படி இறுதியாட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை நேரப்படி பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முதல் அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இந்திய அணி 4வது தடவையாக சம்பியன்ஸ் கிண்ண இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. இந்நிலையில் லாகூரில் உள்ள கடாஃபி மைதானத்தில் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி, முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. ரச்சின் ரவீந்திரா (108) மற்றும் கேன் வில்லியம்சன் (102) ஆகியோரின் அபார சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில், நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுகளை இழந்து 362 ஓட்டங்கள் குவித்தது.

363 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 312 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைய நியூசிலாந்து அணி 4வது தடவையாக சம்பியன்ஸ் கிண்ண இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

அதன்படி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதிப்போட்டியில் இந்திய அணி மூன்றாவது சம்பியன்ஸ் பட்டத்தை இலக்கு வைத்தும் நியூசிலாந்து அணி 2000ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்றதன் பின் இரண்டாவது சம்பியன் பட்டத்தை இலக்குவைத்தும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. கடந்த புதன்கிழமை நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் இதே இந்தியா – நியூசிலாந்து அணிகள் மோதியதில் இந்திய அணி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்திய அணி இதுவரையில் தோல்வியுறாத அணியாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# சொந்த உலக சாதனையை மீண்டும் முறியடித்த டியூப்லான்டிஸ்

சுவீடனைச் சேர்ந்த கோலூன்றிப் பாய்தல் வீரர் அர்மாண்ட் கஸ்டாவ் டியூப்லான்டிஸ் புதிய உலக சாதனை படைத்தார்.

பிரான்ஸில் நடைபெற்ற ஆல் ஸ்டார் பொர்ஷே போட்டியில், அவர் 6.27 மீட்டரை தாண்டி புதிய சாதனை படைத்துள்ளார். முன்னதாக அவரே, கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் போலந்தில் நடைபெற்ற போட்டியில் 6.26 மீட்டர் உயரத்தை தாண்டியது உலக சாதனையாக இருந்த நிலையில், தற்போது அதை விட 1 சென்டிமீட்டர் கூடுதலாகத் தாண்டி முறியடித்திருக்கிறார்.

அவர் தன் முதல் முயற்சியிலேயே அந்த உயரத்தை எட்டினார். டியூப்லான்டிஸ் உலக சாதனையை முறியடிப்பது இது 11-ஆவது முறையாகும். கடந்த 2020 பெப்ரவரியில் போலந்தில் நடைபெற்ற போட்டியில் 6.17 மீட்டரை எட்டியதன் மூலம் அவர் தனது முதல் உலக சாதனையை படைத்தது குறிப்பிடத்தக்கது.




# இலங்கை – நியூசிலாந்து மகளிர் அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று

இலங்கை மகளிர் அணிக்கும் நியூசிலாந்து மகளிர் அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி இன்று நெல்சனில் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியானது, நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட மூன்று ஒருநாள், மூன்று ரி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

இதில் 3 போட்டிகள் ஒருநாள் கிரிக்கெட் தொடர் கடந்த செவ்வாய்க்கிழமை நேப்பியரில் நடைபெற்றது. இந்த போட்டி மழை காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# யூனியன் அஷ்யூரன்ஸின் பங்காளர் விநியோக கிரிக்கெட் சம்பியனான நேஷன்ஸ் ட்ரஸ்ட்




இலங்கையின் முதல் தர பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், பங்காளர் விநியோக கிரிக்கெட் கொண்டாட்டத்தை முன்னெடுத்திருந்தது. வெஸ்லி கல்லூரி மைதானத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றதுடன், யூனியன் அஷ்யூரன்ஸ் ஊழியர்களை ஒன்றிணைத்து, அவர்களின் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியிருந்ததுடன், விறுவிறுப்பான மற்றும் மகிழ்வூட்டும் அம்சங்கள் நிறைந்த நாளாகவும் அமைந்திருந்தது.

இந்த தொடரில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்கசூரன்ஸ் பிரிவு சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டது. யூனியன் வங்கியின் பாங்கசூரன்ஸ் பிரிவு இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.


# ஒருநாள் கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்த முஷ்பிகுர்




பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் அனுபவ வீரரான 37 வயதாகும் முஷ்பிகுர் ரஹீம், ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணியில் ஒருநாள் போட்டிகளில் அறிமுகமான முஷ்பிகுர் ரஹீம் பங்களாதேஷ் அணிக்காக 274 ஒருநாள் போட்டிகளில் ஆடி 7795 ரன்கள் எடுத்திருக்கிறார். இதில் 9 சதங்களும் 49 அரைச்சதங்களும் அடங்கும். பங்களாதேஷ் அணிக்காக அதிக ஒருநாள் போட்டி ரன்களை குவித்த வீரர்கள் பட்டியலில் முஷ்பிகுர் ரஹீம் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். விக்கெட் காப்பாளரான இவர் ஒருநாள் போட்டிகளில் 243 கேட்சுகள் மற்றும் 56 ஸ்டம்பிங்குகளையும் செய்திருக்கிறார்.

முஷ்பிகுர் ரஹீம் இன்னும் ஆறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடினால், பங்களாதேஷ் அணிக்காக 100 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய முதல் வீரர் என்ற சாதனையை நிலைநாட்டுவார் என்பது குறிப்பிடத்தக்கது.


Mushfiqur Rahim · Follow
6h ·

Assalamualaikum wa rahmatullahi wa barakatuhu

I am announcing my retirement from the ODI format as of today.

Alhamdulillah for everything. While our achivements may have been limited on a global level, one thing is certain: whenever I stepped onto the field for my country, I gave more than 100% with dedication and honesty.

The last few weeks have been very challenging for me, and I have come to realize that this is my destiny. Allah says in the Quran: "Wa tu'izzu man tasha' wa tu'zhilu man tasha'" - "And He honours whom He wills, and He disgraces whom He wills." (3:26)

May Almighty Allah forgive us and grant righteous Iman to all. 🤲

Lastly, I would like to deeply thank my family, friends and my fans for whom I have played cricket for the last 19 years.

JazakAllah Khair. 👏

# காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி



**(கல்லடி செய்தியாளர்)**

மட்டக்களப்பு மத்தி வலயத்துக்குட்பட்ட காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி காத்தான்குடி பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.ஆர்.எம்.அஸ்ஹர் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.ஜவாத், மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை முன்னாள் அதிபர் ஜெஸீமா முஸம்மில், காத்தான்குடி மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் எம்.சி.எம்.ஏ.சத்தார் உட்பட கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில் 806 புள்ளிகளைப் பெற்ற அறபா இல்லம் முதலாம் இடத்தையும் 710 புள்ளிகளைப் பெற்ற சபா இல்லம் இரண்டாம் இடத்தையும் 706 புள்ளிகளைப் பெற்ற மறுவா இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# விளையாட்டுத் துளிகள்

நியூசிலாந்துக்கு எதிரான ரி 20 தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணியிலிருந்து தலைவர் முஹமட் ரிஸ்வான் மற்றும் பாபர் அசாம் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். புதிய தலைவராக சல்மான் அலி ஆகாவும் உப தலைவராக ஷதாப் கானும் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் ஒருநாள் தொடருக்கான அணியில் ரிஸ்வான், பாபர் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

★★★★★★★★★★★★★★★

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இடைக்கால பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட ஆக்கிப் ஜாவித் தொடர்ந்து நியூசிலாந்துக்கு எதிரான தொடரிலும் செயற்படுவார் என பி.சி.பி தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் முதலில் 16ஆம் திகதி ஆரம்பமாகிறது.

★★★★★★★★★★★★★★★

இந்தியாவில் முதன்முறையாக உலக பரா தடகள கிராண்ட்பிரிக்ஸ் போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடைபெறும். இதில், 20 நாடுகளைச் சேர்ந்த பரா தடகள வீர, வீராங்கனைகள் பங்கேற்பார்கள். புதுடெல்லியில் உள்ள ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில் 3 நாட்களில் மொத்தம் 90 போட்டிகளை நடத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற முன்னாள் டென்னிஸ் வீரரும் விளையாட்டு வர்ணணையாளருமான ஃபிரெட் ஸ்டோல் தனது 86 வயதில் நேற்று மெல்போர்னில் காலமானார். இவர் 5 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7